2017 மே 25
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஷஃபான் பிறை 28 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 079

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණි දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரக் குரல்







தரங்க, குசல் அதிரடி வென்றது இலங்கை 12»

இலங்கை மாதாவின் மடியில் வைக்கும் ஞானம் சாரா நெருப்பு 04»

ஜம்இய்யதுல் உலமாவின் முஸ்லிம்களுக்கான வழிகாட்டல்கள் 07»



அரச தலைவர் ஒருவரின் விஜயத்திற்காக அவுஸ்திரேலியாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த முதலாவது உத்தியோகபூர்வ அழைப்பை நினைவு கூரும்வகையில் அவுஸ்திரேலியாவிற்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அந்நாட்டு சார்பில் கல்வி அமைச்சரும் செனட் சபை உறுப்பினருமான சிமோன் பேர்மிங்ஹம் வரவேற்கையில் எடுக்கப்பட்ட படம்.

## ஞானசாரதேரர் நீதிமன்றில் நேற்று ஆஜராகவில்லை

### 31 வரை வழக்கு ஒத்திவைப்பு



ஹோமாகம நீதிமன்ற கட்டடத்தினை முற்றுகை விட்டு நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட

11 »»»»

# முஸ்லிம்களின் உரிமைகளை இறுதிவரை பாதுகாப்போம்

### மறுமலர்ச்சி இயக்க தலைவர் விக்டர் ஐவன்

■ ஆதில் அலி சப்ரி

11 »»»»



நாட்டில் சட்டம், ஒழுங்கு வீழ்ச்சி

58 கலவரத்தில் படையினர், கடமையைச் செய்தனர்

83 கலவரத்தில் படையினர், சிங்களவர் பக்கம்

2014 தர்காநகர் தாக்குதலில் படையினர், மௌனம்

## ரமழான் மாத தலைப்பிறை பார்க்க வேண்டுகோள்

■ காதிர்கான்

ஹிஜ்ரி 1438 - புனித ரமழான் மாதத்திற்கான தலைப் பிறையைத் தீர்மானிக்கும் மகாநாடு, (26) வெள்ளிக்கிழமை மாலை மஃரிப் தொழுகையின் பின்னர், கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

11 »»»»

## ஞானசாரரின் உயிருக்கு அச்சுறுத்தல் பொலிஸில் முறைப்பாடு

ஞானசார தேரருக்கு உயிர் அச்சுறுத்தல் நிலவுவதாக பொதுபல சேனா அமைப்பு பொலிஸ் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

ஞானசார தேரருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும் மத ஸ்தானங்கள் மீது தாக்குதல் நடத்தி

11 »»»»

## நாவின்ன ஹார்க் கோட்ஸ் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்



■ பீ.எப்.எம் றிஷாட்

மஹரகம - நாவின்ன நகரில் அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான ஹார்க்கோட்ஸ் மருந்தகத்துக்கு பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இந்த தாக்குதல் இனந் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டதுடன், தாக்குதலினால் நிறுவனத்துக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.மேலும், குறித்த மருந்தகத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு காயங்களோ அல்லது உயிர்

11 »»»»

## முஸ்லிம் அமைப்பு பிரதிநிதிகள் கனேடிய தூதுவருடன் சந்திப்பு



இலங்கைக்கான கனேடிய தூதுவர் ஷெல்லி வைட்டிங் மற்றும் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது முஸ்லிம்களின் மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் வன்முறைகள் மற்றும் தூண்டுதல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீதான அண்மைய தாக்குதல் சட்டம், சமாதானம், ஒழுங்கு மற்றும் நல்லிணக்கத்துக்கு எதிரானது என இது தொடர்பில் கனேடிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அரசு கட்டுப்படுத்தாவிடின் மக்கள் தலையீடு வரும்

■ அ.அருண் பிரசாந்த்



நாட்டில் தற்போது இடம்பெறும் பள்ளிவாசல்கள் மற்றும் வியாபார நிலையங்கள் மீதான தாக்குதல்களை அரசு கட்டுப்படுத்தவிட்டால் மக்கள் அதில் தலையிட வேண்டியேற்படும்

11 »»»»

## பலஸ்தீனுக்கான முதல் தூதுவர் ஜயசிங்க காலமானார்



லஸ்தீனுக்கான முதலாவது இலங்கைத் தூதுவர் மற்றும் இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் ஸ்தாபகர் கலாநிதி ரீ.ஜயசிங்க நேற்று மரணமானார். நோய் வாய்ப்பட்டிருந்த அவர் நேற்று(24) 80ஆவது வயதில் மரணமானார்.

கலாநிதி ரீ.ஜயசிங்க இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தை ஆரம்பித்து, அதன் செயலாளராகவும் நீண்ட காலம் பணியாற்றினார். முன்னாள் பலஸ்தீன தலைவர் யாஸிர் அரபாத் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவும் இவர் ஏற்பாடு செய்திருந்தார். 2013-ஜூலை-25ஆம் திகதி பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் இவருக்கு ஜெரூஸலத்தின் நட்சத்திர வரிசை என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார்.

11 »»»»

## இனவாத செயற்பாடுகள்: விரைவில் பொலிஸார் அறிக்கை

### பாராளுமன்றில் சாகல

■ அ.அருண் பிரசாந்த்

இனவாத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து வெகுவிரைவிலேயே பொலிஸார் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளனர் என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சரான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

11 »»»»

## கடைகளுக்கு தீ வைத்து எவரும் முன்னேறமுடியாது

### திறமை,பண்பாடுகளாலே முஸ்லிம்கள் வியாபாரத்தில் முன்னேறினர்

### மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர் விஜய உந்துபிடிய

■ ஆதில் அலி சப்ரி

திறமை, பண்பாடுகளினூடாகவே முஸ்லிம்கள் வியாபாரத்தில் முன்னிற்கின்றனர். முஸ்லிம்கள் எவ்வாறு முன்னேற்றமடைந்தார்களோ அவ்விதம் முயற்சித்து முன்னேற வேண்டுமே தவிர கடைகளுக்கு தீ வைத்து முன்னேற முடியாது என்ற செய்தியை

11 »»»»

## கஞ்சி தயாரிக்க 4900 மெ. தொன் அரிசி

### தமிழக முதலமைச்சர் பள்ளிகளுக்கு வழங்கினார்

■ திருச்சி சாஹுல் ஹமீத்

இஸ்லாமிய மக்கள் புனித ரமழான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளி வாசல்களுக்கு 4900 மெட்ரிக் தொன் அரிசி வழங்க முதல்வர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது இஸ்லாமிய மக்கள் புனித ரமழான் மாதத்தில்

11 »»»»

நவமணி

www.facebook.com/NavamaniOfficial

# ஆட்சிக்கான சிம்மாசனத்தை நாமே உருவாக்கினோம் வேறு யாரோ மகுடம் சூடுவதற்கு முயற்சி

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார்



ஜனவரி எட்டு தேர்தல் மூலம் இந்த நாட்டில் ஆட்சிக்கான சிம்மாசனத்தை உருவாக்கியது எமது கட்சி. ஆனால் இன்று அதில் வேறு யாரே எல்லாம் மகுடம் சூடப்பார்க்கின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கூறினார். அம்பத்தலை ஒருகொடவத்தை லோலெவல் வீதி அபிவிருத்தியில் காணிகளை இழந்த மேலும் 209 பேருக்கு கடைசிக் கட்டமாக நஷ்ட ஈடாக 261 மில்லியன் ரூபாவை பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஜனவரி 8ல் நாம் ஒரு சிம்மாசனத்தை செய்தோம். அது நினைவில் வருகின்றது. ஆனால் இன்று வேறு யாரோ அதில் மகுடம் சூடிக் கொண்டுள்ளனர். ஏன்னமோ அவர்கள் அமைத்த சிம்மாசனத்தில் நாங்கள் அமர முயற்சிப்பதாக அவர்கள் எண்ணுகின்றனர். சில மாகாணங்களில் புதிதாக முதலமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இந்தப் பதவிகள் கிடைத்தது ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளால். சிவில் அமைப்புக்களின் ஆதரவோடு பல கருத்து பரிமாற்றங்களின் பின் நாம் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றியீட்டி ஆட்சியை உருவாக்கினோம். அதன் பிறகு தான் இவர்களுக்கு முதலமைச்சர் ஆசனங்களில் அமர முடிந்தது. அப்படி இருந்தவர்கள் இன்று எமக்கே விளையாட்டு காட்டப் பார்க்கின்றனர். நன்றி மறந்திருந்த இவர்கள் இப்போது பொது எதிரணி காலை வாரத் தொடங்கியதும் தமது கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்ள மீண்டும் ஐ.தே.க வுக்குள் சரணடைய முயல்கின்றனர். இதைத்தான் விதி என்பது. வட மத்தி, மத்திய மேற்கு இன்னும் ஓரிரு தினங்களில் தென் மாகாணம் என முதலமைச்சர் கதிரைகள் ஆட்டம் காணத் தொடங்கும் போது அவர்கள் ஐ.தே.கவிடம் சரணடைய ஓடி வருவார்கள். எனவே இந்த நிலையை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள் என்று அவர்களிடம் நாம் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். யதார்த்தத்தை புரிந்து கொள்ளாவிட்டால் முதலமைச்சர் கதிரைகளை இழக்கும் நிலை ஏற்படலாம்.

எமது அரசாங்கமாக இருந்தாலும் சரி பிழை செய்தால் அது பிழைதான். உள்ளூராட்சி மன்ற தோதல்களை பிற்போடுவது முற்றிலும் தவறானதோர் செயல். அது மக்களுக்கு உள்ள ஒரு ஜனநாயக உரிமை. அது மட்டுமன்றி இந்தத் தோதல்களை பிற்போடுவதால் இப்போது கிராம மட்டங்களில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உரியது. எனவே இந்தத் தேர்தல்களை ஏற்கனவே இருந்த முறைப்படியாவது இனிமேலும் தாமதமாக்காமல் நடத்த வேண்டும். மக்களுக்கு கிடைக்கக் கூடிய சேவைகளை இடையூறின்றி கிடைக்க வைக்கும் வகையில் மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அந்த முக்கிய பொறுப்பு மாகாண சபைகள் அமைச்சரை சார்ந்துள்ளது என்றார்.

| தொழுகை நேரங்கள் 25.05.2017 | | | | |
|---|---|---|---|---|
| சுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
| 4.33 | 12.08 | 3.32 | 6.21 | 7.36 |
| கொழும்புக்கானவை 6 நிமிடங்கள் கழித்து கணிப்பிடவும் | | | | |

## நல்லாட்சி அரசில் முஸ்லிம்களுக்கு விடிவில்லை

### ஜே.வி.பி. அக்கரைப்பற்று அமைப்பாளர்

(திகாமடுல்ல நிருபர்)

சகல இனங்களுக்கும் சம அந்தஸ்து வழங்குவோம் எனக்கூறி ஆட்சிக்குவந்த இந்த நல்லாட்சி அரசாங்கம் தற்போது முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் எந்தவிதமான பிரச்சினைக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை என அக்கரைப்பற்று மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் எம்.ஐ.அபூசஹீட் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் - கடந்த ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டதுடன், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள் இதற்கு முடிவுகட்டி நல்லாட்சியை கொண்டு வருவோம் என கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை அது மாத்திரமல்லாது முஸ்லிம்களுக்கு கடந்த ஆட்சியில் இடம்பெற்ற இன்னல்களைவிட அதிகமான அச்சுறுத்தல்களும் பள்ளிக்கு கல் வீசுவதும் பெற்றோல் குண்டு வீசுவதும் என பல சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம்பெற்றுவருகின்றன.

இவைகள் அனைத்தும் மீண்டும் ஒரு அச்சமான சூழ்நிலையை உருவாக்கி வருகின்றது. இச் சம்பவங்களை தடுப்பதற்கு இந்த அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும். சுதந்திரமாக எல்லா இன மக்களும் வாழ்வதனை விரும்பியே முஸ்லிம்கள் புதிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்த வாக்களித்தனர். அது மீண்டும் ஒரு இழிவான நிலையையே உருவாக்கியுள்ளது.

எனவே முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இந் நிலைக்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து. அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணியின் அக்கரைப்பற்று அமைப்பாளர் எம்.ஐ.அபூசஹீட் மேலும் தெரிவித்தார்.

## யாழில் தமிழக மீனவர்கள் 6 பேர் கைது

(பாறுக் ஷிஹான்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய இந்திய மீனவர்கள் 6 பேர் நேற்று 23ஆம் திகதி இரவு காரைநகர் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து ஒரு படகில் புறப்பட்ட குறித்த 6 இந்திய மீனவர்களும் காரைநகர் கடற்பரப்பில் கோகுலம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 6 மீனவர்களும் தமிழகம் தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர்கள் பயணம் செய்த படகும் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த மீனவர்கள் இன்றைய தினம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

அவ்வாறு கையளிக்கப்படும் மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

## பட்டம் விடும் போட்டி

( புத்தளம் நிருபர் )

புத்தளம் பாடசாலை மாணவர்களுக்கிடையே பட்டம் விடும் போட்டியொன்று புத்தளம் மணல்தீவு ரோமன் கத்தோலிக்க பாடசாலை நூலக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை 26ஆம் திகதி மாலை 3 மணி முதல் மாலை 6 மணி வரை புத்தளம் கொழும்பு முகத்திடலில் இந்த பட்டம் விடும் போட்டி நடைபெறவுள்ளது. புத்தளம் வடக்கு கோட்ட கல்வி காரியாலயத்திற்குட்பட்ட மணல் தீவு, வேப்பமடு, வட்டக்கண்டல், ஸாஹிரா, சென். மேரிஸ், அலன்குத்தூஸ் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 6,7,8 ஆகிய வகுப்பு மாணவர்கள் இந்த பட்டம் விடும் போட்டியில் பங்கு பற்றவுள்ளனர். முதல் பரிசு 2,000 ரூபாவும் இரண்டாம் மூன்றாம் பரிசாக முறையே 1,500 ரூபா மற்றும் 1,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

## அல்ஹுமைஸரா பாடசாலைக்கு சீ.சீ.ரிவி கெமரா அன்பளிப்பு




பேருவளை சீனன் கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையின் 1990ஆம் ஆண்டில் கல்வி கற்ற க.பொ.த. சாதாரணதர வகுப்பு மாணவர்கள் 3 இலட்சம் ரூபா பெறுமதியான சீ.சீ.ரிவி கெமரா உபகரணத்தை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. இது தொடர்பான வைபவம் நேற்று பாடசாலையில் நடைபெற்றது.

அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் ஆலிம் (நளீமி), லாபிர் மதனி, ஹாரிஸ், ஹில்மி காஸிம், மஸூத் ஸலீம், அஸ்வர் வபா, பர்ஹான் சம்சுதீன் ஆகியோர் இந்த உபகரண தொகுதியை அதிபர் எம்.ஆர்.எம். ரிஸ்கி ஆசிரியர் எம். நளீம் ஆகியோரிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம். பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை முன்னிற்று மேற்படி 1990 ம் ஆண்டு க.பொ.த சா/தரம் கல்வி கற்ற மாணவர் குழுவினர் பணம் சேகரித்து இதனை அன்பளிப்புச் செய்துள்ளனர். ( பேருவளை பீ.எம். முக்தார்)



பேருவளை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளி வாசலில் வருடாந்த புர்தா தமாம் மஜ்லிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. புத்தளம் விருதோடை அஸீஸியா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவிரையாளர் மௌலவி ஏ.எல். நிப்ராஸ் (ஸக்காபி) பங்கு பற்றியோர் மத்தியில் உரையாற்றுவதை படங்களில் காணலாம். (படம்- பேருவளை பீ.எம். முக்தார்)

# பல்கலை முஸ்லிம் மாணவிகளை உசுப்பேற்றிய முஸ்லிம் மஜ்லிஸின் ஒருநாள் செயலமர்வு

தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டின் பெயரில் பெண்களுக்கான ஒருநாள் செயலமர்வு கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை நடந்தேறியது.

இச் செயலமர்வின் வழிநடத்துனர்களான கலாசாரக்குழுச் செயலாளர் ஜே. ஜஸான் ஸலபி, முஸ்லிம் மஜ்லிஸ் பொதுச் செயலாளர் எல். ஸவாஹிர் ஸலபி , முஸ்லிம் மஜ்லிஸ் பொதுத்தலைவர் கே.எம் இஹ்சான் அப்பாஸி மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் பொருளாளர் ஏ.ஜீ. எம் பஸால் ஸலபி ஆகியோரின் முழுமூச்சான அர்ப்பணிப்பின் பிரகாரம் நிகழ்வு வெற்றி கண்டது.

காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.30மணி வரை நடைபெற்ற இந்நிகழ்வானது இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்தின் பீடாதிபதி எஸ்.எம்.எப் மஸாஹிர், மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் பொருளாளர் ஏ.எல்.ஏ றவூப் ஆகியோரது பூரண ஒத்துழைப்பின் பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வுகளின் ஆரம்பத்தே கலை மற்றும் கலாசார பீடத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஏ. எஸ்.எப் சஹ்நியா வரவேற்புரையை வழங்னார். தொடர்ந்து இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீட அரபுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அல் ஆலிமா எம். சீ. எஸ் ஷாதியாவினால் செயலமர்வு பற்றிய அறிமுகம் நடைபெற்றது. அவர் தனது உரையில் 'பாரிய செலவீனங்களுக்கு மத்தியிலும் நமது பல்கலைக்கழக மாணவிகளின் ஆன்மீகப் பக்குவத்தை வளப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்நிகழ்வில் அனைவரும் பூரண பயன்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதன்படி முதலாவதாக 'பல்கலைக்கழகச் சூழலில் முஸ்லிம் யுவதிகள் என்ற தலைப்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன மாதர் மஜ்லிஸின் நிகழ்ச்சி நடாத்துனர் அல்ஆலிமா கஸ்பிகா ஜுனைத் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையிலே வெறும் உலகக் கல்விக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் பட்டதாரிகளாக அன்றி குர்ஆனிய நிழலில் மார்க்கத் தெளிவு பெற்று, நாளைய சமூகத்துக்கு உகந்த பட்டதாரிகளாய் உருமாற வேண்டும் என்று அழுத்தமாய் எடுத்துக்கூறினார். தொடர்ந்து 'பல்கலைக்கழகச் சூழலில் முஸ்லிம் யுவதிகள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும் என்ற மகுடத்தே மாவனல்லை ஆயிஷா ஸித்தீகா கல்லூரி மற்றும் கல்எலியா மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் அல் ஆலிமா ஜலீலா ஷபீக்கின் கலந்துரையாடல் இடம்பெற்றது. அவர் பல்கலைக்கழக மாணவிகளிடம் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கேள்விகளைத் தொடுத்து அதற்கேற்றாா் போன்று தீர்வுகளையும் வழங்கினார். மாணவிகள் குறித்த வளவாளரிடம் நிறைய சந்தேகங்களைக் கேட்டு தெளிவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சிகளில் அடுத்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மூன்றாம் வகுப்பு மாணவிகளினால் சுமையா(றழி) வரலாற்றுச் சம்பவம் ஒன்றை எடுத்துக் காட்டக்கூடிய அர்ப்பணிப்பை மையப்படுத்திய நாடகம் அரங்கேறியது.

கட்டிளமைப் பருவமும் சமூக வலைத்தளங்களும் என்ற தலைப்பேற்று கல்எலிய மகளிர் கல்லூரியின் பிரதித் தலைவர் அல் ஆலிமா மஹீஸா நஸ்ருல்லாஹ்வின் உரை நிகழ்ச்சியை உயிர்ப்பிக்கச் செய்தது. 'சமூக வலைத்தளங்களை எவ்வாறு கையாள்வது? அதன்மூலம் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் போன்றவற்றை மனதை உருத்தும் வகையில் எடுத்துக் காட்டி கவலைப்பட்டார். மண்டபத்தில் இருந்த அனைவரும் மயான அமைதியுடன் அவரது உரையை வாங்கிக் கொண்டனர்.

தொடர்ந்து இங்காற்றப்பட்ட உரைகளை உள்வாங்கிய வினாவிடை போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.நிகழ்ச்சிகளின் இறுதியாக வெறுமனே வந்து போனோம் என்றில்லாமல் ஒவ்வொருவரும் தான் செய்த தவறுகளை மீட்டி வருந்தும் வகையிலான முஹாஸபா நிகழ்வு நடந்தேறியது. இங்கு வந்திருந்த அனைவரும் அதுவரை செய்த பிழைகள் குறித்து குற்ற உணர்ச்சியுடன் வருந்த, கண்கள் எல்லாம் குளமாகப் பெருக்கெடுத்து ஓடின.அதன்படி இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் வித்தியாசமான பாணியில், ஆன்மீக உயிரோட்டத்தை பலப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று முடிந்தன.

இங்கு வருகை தந்திருந்த வளவாளர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவிகள் என அனைவருக்குமான காலை பகல் போஷனங்கள் உட்பட தேநீர் உபசாரம் போன்ற அனைத்தையுமே முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்திருந்தது. 'அல்லாஹ் யாருக்கு நலவை நாடுகின்றானோ அவருக்கு மார்க்கத்தில் தெளிவை வழங்குவான் என்ற கூற்றுக்கு இசைவாக, உறங்கிக் கொண்டிருக்கும் உள்ளங்களை தட்டி எழுப்பிவிடக் கூடிய உயிரோட்டமானதோர் நிகழ்வாக இந்நிகழ்வு நடந்தேறியது.அன்றைய நாள் முழுதும் இஸ்லாமிய வரையறைகளுக்கு ஏற்றார் போல் ஒவ்வொரு விடயங்களும் கண்காணிக்கப் பட்டதோடு, நமது மஸ்ஜிதில் ஜமாஅத்திலே அனைவரும் ஒன்றாக இருந்து தொழக்கூடிய ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருந்தன.

அதன்படி பாரிய செலவீனங்களுக்கு மத்தியில் இவ்வளவு பிரயோசனமானதோர் நிகழ்வை சிறப்பான திட்டமிடல்களுடன் ஏற்பாடு செய்திருந்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மென்மேலும் அருள்பொழிவானாக.

# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

# அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் முகவர் நிலையங்கள் - 2017

| S. No | Name & Address of the Travel Agency | Name & Tel. Nos. Of the Leaders | Package 1 Rs. | Package 2 Rs. |
|---|---|---|---|---|
| 01 | **Aalam International Tours & Travels**<br>No.10/1, Arthurs Place<br>Colombo-04 | Mr. A.J.M.M. Aboo Yousuf<br>011-2081842, 0777- 733153<br>072-7733153 | 475,000 | 600,000 |
| 02 | **Aathika Hajj Travels (Pvt) Ltd**<br>No. 18/1, Matale Road,<br>Katugastota | Mr. M.J. Mohamed Jazeer<br>0777-841238, 081-2500740 | 485,000 | 500,000 |
| 03 | **Abdullah Travels**<br>No. 211/1, 1st Division, Maradana,<br>Colombo- 10. | Mr. M.S.M. Ibrahim<br>011-2395060, 0777-253061 | 525,000 | - |
| 04 | **Accent International Travels & Tours**<br>No. 161/1/1, Madawala Road,<br>Katugastota | Mr. A.S.R. Ahamed<br>071-1744255, 077-3550771 | 525,000 | - |
| 05 | **Aman Travels & Tours**<br>No. 293A Kadawatha Road, Nadimala,<br>Dehiwala | Moulavi M.H.M.Zubair<br>071-4589617, 011-5553210 | 550,000 | - |
| 06 | **Al-Arafath Travels**<br>408 ½, Orabi Pasha Road, Maradana,<br>Colombo – 10 | Mr. S.H.M. Imaduddeen<br>011-4061044, 0777 513496<br>072-7513496 | 525,000 | 475,000 |
| 07 | **Al – Aqsa Global (Pvt) Ltd.**<br>No: 86A 1/1, Waiarappola Road,<br>Mount Lavinia | Mr. M.R.M. Naizer<br>011-2721091, 0777-514890, | 530,000 | - |
| 08 | **Al Bayan Travels**<br>No. 198, Main Street<br>Eravur | Mr. N. Jalabdeen<br>065-2241408, 0777-958937 | 570,000 | - |
| 09 | **Al - Hafil Travels**<br>No. 21/A/2, Hassan Mawatha,<br>Mawanella | Moulavi M.J.A. Husain<br>035-2247625, 0777-573001 | 450,000 | 540,000 |
| 10 | **Al-Hakeem Lanka Travels & Tours**<br>No. 46, New Colombo Road,<br>Mawanella | Mr. M.J.M. Abdul Haleem<br>035-2247547, 0777-811993<br>075-8604001 | 525,000 | - |
| 11 | **Al-Haramain Travels & Tours**<br>No.23/1, 1st Floor, Galle Road,<br>Dehiwala North | Mr. Z. Shafi<br>011-2737179, 071-3190172 | 600,000 | 550,000 |
| 12 | **Al-Hikma Hajj Service**<br>No.219 Colombo Road, Kaluwella,<br>Galle | Mr. M.T.M. Akram<br>072-7724505, 091-2232759 | 525,000 | - |
| 13 | **Al-Hijra Hajj & Umrah Travels**<br>No.18, Hijragama,<br>Hemmathagama | Mr. S.M. Nazar<br>035-4923130, 077-3107401 | 550,000 | 450,000 |
| 14 | **Al Kaswa Travels & Tours**<br>No. 171/B, Viruthodai,<br>Madurankuli | Mr. M.J.M. Zain<br>032-22268366,077-3242692 | 525,000 | - |
| 15 | **Al – Kubra International Tours & Travels**<br>No. 3, Srimath Bandaranayake Mawatha, Huldroff Junction,<br>Colombo – 12 | Mr.Niyasdeen Sathar<br>011-3133504, 072- 5238401 | 475,000 | 560,000 |
| 16 | **Al-Masha Hajj Travels**<br>No. 126, Kandy Road,<br>Madawala Bazaar | Mr.A.N.M.Zamil<br>081-2300068,077-8090220<br>077-8090220 | 525,000 | - |
| 17 | **Al - Rifa Travels**<br>No. 87, Main Street,<br>Mawanella | Mr. A.L.M. Nijas<br>035-2247232, 0777-592122 | 525,000 | - |
| 18 | **Al - Safaa Hajj Service**<br>No. 02, Beligammana,<br>Mawanella | Mr. A.L.M. Farook<br>035-2247232, 077-3107887<br>0777-639589 | 550,000 | - |
| 19 | **Al – Ummra Hajj Travels**<br>No. 348/1, Mal 2nd Lane,<br>Sammanthurai | Moulavi I.L. Abdul Gaffoor<br>067-2260647, 077-9693282 | 550,000 | - |
| 20 | **Al - [Zamil Lanka Travels & Tours (Pvt) Ltd.**<br>No. 38 ½ & 38 ½ A, Second Floor,<br>Symonds Road, Maradana,<br>Colombo – 10 | Dr. M.T.A. Lebbe,<br>011-2671999, 011-2671555 | 520,000 | - |
| 21 | **Al- Ziyarra Tours & Travels**<br>No. 118/1, Colombo Road,<br>Mahamodara,<br>Galle | Mr. M.N.M. Multhazim,<br>0777-900696, 0777-411080 | 530,000 | 600,000 |
| 22 | **Aman Travels & Tours**<br>No. 37, Kolonnawa Road,<br>Kolonnawa | Mr. K.M.R. Nizamdeen<br>011-2533101, 077-2224404 | 550,000 | 450,000 |
| 23 | **Amanath Tours & Travels**<br>229, 2/9,2nd Floor, Santhosh Plaza,<br>Main Street<br>Colombo-11 | Mr.M.G.M.Isham<br>011-2393330, 011-2432503,<br>0777-754068 | 675,000 | - |
| 24 | **Ameen Travels**<br>No. 133/17, City Center, Main Street,<br>Kurunegala. | Mr. S.I.M. Razak,<br>037-4690116, 0777-844423 | 500,000 | 515,000 |
| 25 | **Amja Travel (Pvt) Ltd**<br>K/G/1, Dias Place,<br>Colombo-12 | Mr. H.M. Amjadeen,<br>011-2335657, 0777-308079 | 550,000 | 650,000 |
| 26 | **Amriza Travels**<br>No.476 D1, A ,1st Floor,<br>Maradana Shopping Centre,<br>Colombo 10 | Mr. H.L.M. Sadick,<br>011-2678534, 077-3749831, | 450,000 | - |
| 27 | **Asia Travels & Tours**<br>No. 167, Galle Road,<br>Beruwala | Mr. M.I.M. Nowfer<br>034- 4650465, 077-3509057 | 600,000 | - |
| 28 | **Asna Travels**<br>U.C.Road,<br>Kinniya-04 | Moulavi. A.J.M. Riyas<br>026-2237016,0777-412168 | 525,000 | 450,000 |
| 29 | **Aysha Travels & Tours(Pvt)Ltd.,**<br>No. 137,2nd Floor,Puttalam Road,<br>Kurunegala | Mr. M.A.M. Arif<br>037-2221454, 037-2224070 | 475,000 | - |
| 30 | **Azar Travels & Tours**<br>No. 163/2, S.W.R.D. Bandaranayake Mw.<br>Kandy | Mr. A.J.M. Hasen<br>077-3275466 ,018-2498021 | 550,000 | 460,000 |
| 31 | **Barakath Travels & Tours**<br>66 1/15, Front St,<br>Colombo – 11 | Mr. M. Awoon Awoof<br>011-2337832,0777-300533<br>0722226786 | 675,000 | - |
| 32 | **Binnooriya Hajj Travels**<br>No. 235/1, Grandpass Road,<br>Colombo – 14 | Mr. S.M.M. Faizal<br>077-8230414, 077-8173438<br>072-7245606, 011-2431812 | 450,000 | 525,000 |
| 33 | **Buraque Travels**<br>No. 62, Dematagoda Road,<br>Colombo – 09 | Moulavi A.L.M. Khaleel,<br>011-2678811, 0777-909377 | 495,000 | - |
| 34 | **Careem Lanka Travel & Tours (Pvt) Ltd** No.95, Chatham Street,<br>Colombo-01 | Mr. A.C.B.M. Careem<br>0777-734444, 011-4717188,<br>011-472487 | 525,000 | 600,000 |
| 35 | **Eastgate Traveller**<br>Main Street,<br>Oddamavadi | Mr. M.M. M. Halaldeen<br>065-2258290, 077-5440040 | 550,000 | - |
| 36 | **F & F Travels**<br>No. 476 D/8, First Floor,<br>Maradana Shopping Complex,<br>Colombo 10. | Mr. S.M. Faris,<br>011-2672871,0777-805730<br>077-3646677 | 550,000 | 600,000 |
| 37 | **Fahama s Travels**<br>No. 47, Lukmanjee Square,<br>Colombo 14 . | Mr. M.I.A. Fahim,<br>011-2424565, 071-4838028<br>011-2321470 | 550,000 | 500,000 |
| 38 | **Fair Travels**<br>No. 215, First Floor, Grandpass Road,<br>Colombo – 14 | Mr. M.M. Marook<br>0777-813373, 081-2300070 | 450,000 | 550,000 |
| 39 | **Fantico Tours & Travels**<br>No. 529 1/1, Peradeniya Road<br>Kandy | Mr. A.R.M. Faris<br>081-2233383, 081-4472944 | 490,000 | - |
| 40 | **Farha Travels**<br>No.12A Mosque Lane,<br>Wattarapola Road,<br>Mount Levinia | Mr. S.H. Moulana<br>077-3261786, 077-5122111,<br>011-2721033, | 561,640 | - |
| 41 | **Global Travels & Tours**<br>No. 225/4, 2nd Cross Street<br>Colombo – 11 | Mr. H.J.T. Mansoor<br>011-2339044,011-2365157<br>0777-555777 | 550,000 | 450,000 |
| 42 | **Hafsa Travels & Tours (Pvt) Ltd.**<br>No.13A1 Kurunegala Road,<br>Puttalam | Moulavi J.A.Jamaldeen<br>032-2224581, 0777-559126 | 575,000 | - |
| 43 | **Hajara Travels**<br>No.1D/1, Charlimont Road, Wellawatta<br>Colombo-06 | Seyed Alavi Salih Moulana<br>011-2559001-2-3,<br>0777-904933, 0777-772777 | 541,400 | - |
| 44 | **Hamdhan's (Pvt) Ltd.**<br>No. 95, Ambagamuwa Road,<br>Gampola | Mr. M.R.Mohamed Fahim<br>072-7308025, 0777-308025<br>081-2353449 | 550,000 | - |
| 45 | **Hamas Hajj Travels**<br>No.655/1, Avissawella Road<br>Wellampitiya | Mr. A.S. Kaleel<br>011-2532124, 0777-559433 | 600,000 | 650,000 |
| 46 | **Hanee Travals**<br>No. 243/2, Main Street,<br>Akkaraipattu – 02 | Mr. A.H. Fahri Haneen<br>067-2277458,071-8204076 | 550,000 | - |
| 47 | **Hathee Hajj Travels**<br>No. 30, Muthaliyar Rd,<br>Akkaraipattu – 17 | Mr. M.A. Noordeen<br>067- 2277315, 0777- 709087. | 550,000 | - |
| 48 | **Hilltop Global (Pvt) Ltd**<br>No.# 14,16th Lane,<br>Colombo-03 | Mr. M.Z. Jalaldeen<br>011-4212121, 077-2366520 | 550,000 | - |
| 49 | **Hira Travels & Tours**<br>No. 79A, Main Street,<br>Colombo 11 | Moulavi S.H.M. Aliyar,<br>011-2472153, 077- 3739028 | 510,000 | - |
| 50 | **H.M.H. Hajj Travels**<br>8th Street, Block "J" West<br>Sammanthurai | Moulavi A.L.Hajji Mohamed<br>067-2260527, 0777-140951 | 495,000 | - |
| 51 | **Ilma Haj Service & Travel Operators**<br>No. 136/-E,Dam Street,<br>Colombo-12 | Al Haj M.T.M. Aroos,<br>011-2478000, 077- 726522<br>0777-726522 | 525,000 | 550,000 |
| 52 | **Imarah Travels & Tours (Pvt) Ltd.**<br>No. 40/1 A, Kalubowila<br>Dehiwala | Mr. A.B.M. Nooman,<br>0777-300397, 011-2761617 | 590,000 | - |
| 53 | **Iqra Travels & T0urs (Pvt) Ltd**<br>No.195-1B, Galle Road, Bambalapitiya,<br>Colombo-04 | Mr. M.O.F. Jezeem<br>011-2500082-83,<br>0777-788682, 0777-707088 | 650,000 | - |
| 54 | **Island Travels**<br>No. 85, Colombo Street,<br>Kandy | Mr. S.H.M. Iqbal<br>011-2572391, 0777-271168<br>077-3748905 | 500,000 | - |
| 55 | **Kamalullah Haj Travels**<br>Sansan Jewellery, Main Street,<br>Ridigama | Moulavi. U.L. Ubaidullah<br>0777-245643, 037-2252525 | 490,000 | - |
| 56 | **Kara Travel & Tours (Pvt) Ltd**<br>No.6, R.A.De Mel Mawatha,<br>Duplication Road, Bambalapitiya,<br>Colombo-04 | Mr. M.M. Ahmed Nijar,<br>011-2553022, 011-2554430<br>0777-759909 | 550,000 | 750,000 |
| 57 | **Kattankudy "Mosques" Federation Haj Travels & Tours**<br>No. 01, Maththaipalli Road,<br>Kattankudy -03 | Mr.M.T.M. Khalid<br>065-2246603, 077-3453353 | 572,818 | - |
| 58 | **Khairaz International Travels & Tours "Khairaz Complex"** No. 298,<br>George R.De Silva Mawtha, Kotahena,<br>Colombo 13. | Mr. S.H. Samoon,<br>011-2447123, 0777-538382,<br>0777-371538 | 525,000 | - |
| 59 | **Khalkiya Travels & Tours**<br>No.60B, Green Lane, Kotahena,<br>Colmbo-13 | Mr.S.H.Sirajadeen<br>011-24481556,0777-478070 | 525,000 | - |
| 60 | **Mafas Hajj Travels**<br>No. 97/3, Old Road<br>Kattankudy – 05 | M.A.Mafas<br>065-2245449, 077-3606776 | 500,000 | - |
| 61 | **Mariyam Haj Umra Travels and Tours**<br>No. 145, Mal 13th Street,<br>Malayadi Gramam – 02<br>Sammanthurai | Mr. A.B.M. Arafath<br>067-2260949, 0777-775295 | 495,000 | - |
| 62 | **Midland Travel (Pvt) Ltd.,**<br>"Hilltop House"<br>No. 14, 16th Lane, Galle Road,<br>Colombo – 03 | Mr. M.C.M. Imthiyas,<br>038-2299734, 0777-913091<br>038-2299530, 0777-346948 | 525,000 | 550,000 |
| 63 | **Mina Travels & Tours (Pvt) Ltd.**<br>G/L/G, 03, Dias Place, Gunasinhapura,<br>Colombo – 12 | Moulavi. M.F.N.M. Usama<br>011-2441133, 011-4892337,<br>0777-368537 | 590,000 | 600,000 |
| 64 | **M.N. Travels & Tours**<br>No. 567 A, Marawa, Atulugama,<br>Bandaragama | Mr. P.M.M. Najeeb,<br>038-2291032, 0777-394971 | 575,500 | 525,00 |
| 65 | **M.N.S.B. Travels & Tours**<br>No.3/6,59th lane, Off Fussels Lane,<br>Wellawatta,<br>Colombo-06 | Mr. H.I.M. Ramjan<br>011-2508069, 011-2360312<br>077-1511989 | 500,000 | - |
| 65 | **M.P.S. Hajj Travels**<br>No. 14, Main Street<br>Mathurankuliya. | Mr. M.P.S. Abdeen<br>011-2444432, 032-2268004,<br>0777-895847 | 550,000 | - |
| 67 | **Moulana Travels & Tours (Pvt) Ltd.,**<br>No. 195, First Floor Galle Road,<br>Colombo-04 | Mr. S.M.N. Moulana,<br>011-5337708-9, 0777-872889 | 550,000 | 500,000 |
| 68 | **Multhazam Enterprises & Travels**<br>Main Street,<br>Sainthamaruthu – 07 | Mr. M.S.F.R. Mucpdthasy<br>071-8128130, 077-2906633 | 575,000 | 525,000 |
| 69 | **Muna Haj & Umrah Services**<br>No. 53, Jayantha Weerasekara Mawatta,<br>Colombo – 10 | Mr. M.M. Mohamed<br>011-4717670, 071-4098553<br>077-9977779 | 575,000 | - |
| 70 | **N.M. Travels & Tours (Pvt) Ltd.**<br>No. 569, Galle Road,<br>Colombo 6 | Mr. M.S.H. Mohamed<br>011-2361254, 071-2799648 | 390,000 | 490,000 |
| 71 | **Niyazy Travels (Pvt)Ltd.,**<br>No 22, Daulagala Road,<br>Gelioya | Moulavi M. Niyas<br>071-7351447, 077-9682512 | 525,000 | 475,000 |
| 72 | **Rashadi Travels**<br>1st Floor, Saleem Complex, Dambulla Road, Ibbagamuwa | Moulavi.A.Zaid,<br>0777-327825, 037-4917142 | 550,000 | 600,000 |
| 73 | **Rasheediya Travels**<br>No. 40 -2/2, Galle Road,<br>Wellawatta | Mr.M.R.M.Darukku<br>037 2285216, 077-1838770 | 500,000 | - |
| 74 | **Reema Hajj Travels & Tours**<br>No. 65/1, Main Street,<br>Kattankudy – 06 | Mr. M.C.M. Zubair<br>065-2247125, 077-5021996<br>077-9837157 | 550,000 | 650,000 |
| 75 | **Royal Fathima Travels & Tourism**<br>No. 271, Main Street, Kottikarachi,<br>Kinniya – 04 | Moulavi M.S.M. Shafaath<br>026-2236800, 077-2260640<br>072-7760640 | 575,000 | - |
| 76 | **Safaa Travels (Pvt) Ltd**<br>No.22, Wimelasiri Road, Kalubowila,<br>Dehiwala. | Mr. H.M. Shameem,<br>0714095706, 011-4383250 | 500,000 | - |
| 77 | **Safeway Travels & Tours**<br>No.8A, Vajira Road<br>Colombo-04 | Mr.M.R.M.Farook<br>011-2507614,0777-660637 | 550,000 | 650,000 |
| 78 | **Safra Travels**<br>No. S/L/G 4, Dias Place,<br>Gunasinghapura,<br>Colombo-12 | Mr. A.R.M. Ameerul Amer,<br>011-2335699, 0777-667152 | 625,000 | 525,000 |
| 79 | **Salama Hajj Travels**<br>No. 156/1/7, Asna Super Market,<br>Matale Road, Akurana. | Moulavi N.S.M. Gazzaly<br>0777-546954 | 500,000 | - |
| 80 | **Sahwan Travels & Tours**<br>No. 53/8, Center Road,<br>New Kattankudy -03 | Mr. S.M.M. Sameen<br>065-2247733, 077-4815000 | 526,000 | 550,000 |
| 81 | **Siddique Travels & Tours**<br>No. 94, Mannar Road,<br>Puttalam | Mr. S.M.M. Nuhman<br>032-2267141, 072-7052572<br>077-1806737 | 495,000 | - |
| 82 | **Sky Word Travels (Pvt) Ltd.**<br>F-21, Peoples park Complex,<br>Colombo 11. | Mr. S. Sahabdeen<br>011-2395356, 077-3118778 | 637,000 | 525,000 |
| 83 | **SMS Travels & Tours**<br>No. 28, Jail Street,<br>Hambantota | Mr.M.M.S. Mujibur<br>047-2222081, 071-8645650 | 525,000 | - |
| 84 | **Suhair Hajj Travels**<br>No.105, Sheik Jamaldeen Road<br>Beruwala | Mr.A.B.M.Suhair<br>034-2270265,0777-889924 | 550,000 | 475,000 |
| 85 | **TGL Travels & Tours (Pte) Ltd.,**<br>No.90, Chattam Street,<br>Colombo-01 | Mr. M.M. Thasleem<br>011-5341134, 0777-340447 | 640,000 | 530,000 |
| 86 | **The Traveller Global (Pvt) Ltd.**<br>UG-95, People's Park,<br>Colombo – 11 | Mr. M.R. Rifard Rizmy<br>011-2421578, 0777-372682<br>0777-301816 | 575,000 | - |
| 87 | **The Gobal Travels and Leisure(Pvt)Ltd.,**<br>No. 3A, Ananda Mawatha,<br>Colombo – 10 | Mr. M.A.M. Asker<br>011-7221720, 0777-031523 | 525,000 | - |
| 88 | **Travel Data Tours & Travels(Pvt) Ltd.,**<br>No. 9, School Lane,<br>Colombo-03 | Mr. M.I.A. Fuward<br>011-2581015, 0777-331007 | 550,000 | - |
| 89 | **Trans Tours (Ceylon)Private Ltd.,**<br>No.1169,1st Floor,Maradana Road,<br>Colombo-08 | Mr.M.T.M.Nazar<br>0115-5644300,0777-323175<br>011-4341485 | 550,000 | 500,000 |
| 90 | **Trans World Travels & Tours**<br>No.151, Lyards Broadway Road,<br>Colombo - 14 | Mr.Althaf Nawaz<br>011- 5745551, 0757445544<br>075-4376994 | 550,000 | 600,000 |
| 91 | **Ummul Qura Haj Travels**<br>No. 307A, Maccamady Road,<br>Maruthamunai - 03. | Moulavi M.I. Husainu Deen<br>067-2220737, 0777-274279 | 525,000 | - |
| 92 | **U.N.S. Travels**<br>No. 124, Mill Road,<br>Addalaichenai – 01. | Mr. U.L.M. Abdul Salam<br>067-2278079, 071-3399820<br>077-6700760 | 575,000 | - |
| 93 | **Welcome Hajj Travels**<br>Nooraniya Street<br>Mutur-5 | Mr.A.J.M.Wakeer<br>026-2278079,077-1371511<br>077-8811999 | 550,000 | - |
| 94 | **Yara Travels(Private)Limited**<br>TFC 1st Floor Main Street,<br>Akkaraipattu | Mr. S.M. Riswan<br>011-2691405, 067-2279599<br>0777-3767570 | 550,000 | 600,000 |
| 95 | **Zahiya Travels & Tours**<br>No. 86, Union Place,<br>Colombo 02 | Mr. T.I.M. Razak<br>0777-636984,0777-546020 | 525,000 | - |
| 96 | **Zamzam Hajj Travels**<br>No. 158, Arabic College Road,<br>Akkaraipattu 05 | Moulavi I.L.Abdul Rasheed,<br>067-2277178, 0777-114725<br>0777-771383 | 525,000 | - |

மேலே கூறப்பட்டுள்ள விலைமனு விமானக் கட்டணம், ஹஜ் சேவைக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், உணவு தங்குமிட வசதிகள், மௌலவி வழிகாட்டல் சேவைகள், பராமரிப்புக் கட்டணம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும். குர்பான் செலவு இதில் உள்ளடக்கப்படமாட்டாது.

யாத்திரிகர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமான தொகையினை செலுத்துவதை விட்டும் தவிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

யாத்திரிகர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஹஜ் முகவர்கள் தவிர்ந்த ஏனையவர்களுடன் செய்துகொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக திணைக்களம் பொறுப்பேற்காது.

எம்.ஆர்.எம். மலிக்
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
25TH MAY 2017 - THURSDAY

# சட்டம், நீதியை நிலை நிறுத்துவதில் பொலிஸார் கடமையைச் சரியாகச் செய்கிறார்களா?

நாட்டில் கலவரங்களைத் தோற்றுவிப்போருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பினையும் கடமையையும் பொலிஸாருக்கு குறிப்பாக குறிப்பிட்ட பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்தது.

தம் பிரதேசத்தில் ஏற்படும் அமைதியின்மையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பொலிஸாருக்குள்ள நிலையில் அரசு புதிதாக வழங்கியுள்ள பணிப்புரை பொலிஸாருக்கு தம் கடமைகளை நினைவுபடுத்தும் ஒரு பணிப்புரையாகவே நோக்கலாம்.

கடந்த இரு வாரங்களாக முஸ்லிம்களையும் தமிழர்களையும் இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்ட பள்ளிவாசல் தாக்குதல்கள், வர்த்தக நிலையத் தீ வைப்புச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை ஒருவரையேனும் கைது செய்யவில்லை.

நாட்டில் இடம்பெறும் ஏனைய கொலை, களவு, தீ வைப்பு சம்பவங்கள் தொடர்பாக அந்த நிகழ்வுகள் இடம்பெற்ற அடுத்த சில மணி நேரத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதில் வல்லமையுள்ள பொலிஸாருக்கு சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதற்கான வல்லமை இல்லையா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

பத்து நாட்களுக்குள் 20 சம்பவங்கள் நடைபெற்ற பின்னராவது பொலிஸாருக்கு அரசு இந்தப் பொறுப்புக்களை ஒப்படைத்திருப்பது வரவேற்புக்குரியதே.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் செயற்றிறமைமிக்க இலங்கை பொலிஸார், மதத்தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைத் தாக்குவோர் குறித்து மென்மைப்போக்கினைக் கடைப்பிடித்தால் இலங்கை பொலிஸார் பற்றி இருக்கும் மதிப்பும் இல்லாமல் போகலாம்.

வர்த்தக நிலையங்கள் தீ வைக்கப்படுவது தொடர்பாக பொலிஸார் எந்தவித தேடுதல்களை மேற்கொள்ளாது மின்சார ஒழுக்கு என்று கூறிவிடுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன் அளுத்கமையில் இடம்பெற்ற மல்லிகாஸ் என்ற வர்த்தக நிலையத் தீ தொடர்பாக அளுத்கம பொலிஸார் மின்சார ஒழுக்கு என்று அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். சில மாதங்களின் பின் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்களது அறிக்கையில் அது விசம் கலந்த மண்ணெண்ணெயினைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட அழிவு எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வென்னப்புவ லாஸ்ட்சான்ஸ் தீ வைப்பு தொடர்பாகவும் பொலிஸார் மின் ஒழுக்கு என்றே தெரிவித்திருந்தனர். குறிப்பிட்ட வர்த்தக நிலைய உரிமையாளர் நிறுவனத்தை மூடிவிட்டுச் செல்லும் போது மின்சாரத்தை முற்றாகத் துண்டித்துவிட்டு சென்றதாகக் கூறுகின்றார். கஹவத்தையில் தீக்கிரையாகிய தமிழருக்குரிய சில்லறைக்கடையிலும் குப்பிவிளக்கு விழுந்ததனாலேயே தீப்பற்றியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிடைக்கும் சான்றுகளின்படி கடைக்குப் பின்னாலிருந்து குண்டினை வீசியதாலே தீப்பற்றியதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சிறுபான்மையினரது வர்த்தக நிலையங்கள் தீப்பற்றும் போது மின்ஒழுக்கு என பொலிஸார் அவசரப்பட்டு அறிக்கைவிடுவது குறித்தும் உயர் பொலிஸ் அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொலிஸ் ஆணைக்குழு கூட இவ்வாறான கூற்று குறித்து விசாரணை செய்து பார்ப்பது நல்லது. அப்படியில்லாவிடின் பொலிஸ் சேவைமீது இந்நாட்டு சிறுபான்மையினருக்கு நம்பிக்கையில்லாத நிலையே ஏற்படும்.

# இலங்கை மாதாவின் மடியில் வைக்கும் ஞானசார நெருப்பு

பஷீர் சேகுதாவூத்



நெருப்பு ஆயுதத்தை உபயோகித்து பௌத்த சிங்கள வெஞ்சினக் குழுக்கள் முஸ்லிம் மக்களின் மார்க்கம், மஸ்ஜித், மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் மீது **2013** இல் தொடங்கிய ஒருதலைப்பட்ச யுத்தம் இன்று வரை ஏறுமுகத்தில் தொடர்கிறது.

முஸ்லிம் மனிதர்கள் மீது தாக்குதல் தொடுத்து உயிரை உறிஞ்சி, வரலாறு காணாத வகையில் சிங்கள- முஸ்லிம் கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் வடகிழக்கிற்கு வெளியில் வாழ்ந்து வரும் மூன்றில் இரண்டு வீத முஸ்லிம்களை ஏற்கனவே நிலப்பற்றாக் குறையினால் அல்லலுறும் கிழக்கின் முஸ்லிம்கள் வாழும் நிலப்பகுதிக்குத் துரத்தியடிக்கும் வாய்ப்பு ஒன்றையும், தக்க தருணத்தையும் முஸ்லிம்களே ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு தரகர்கள் காத்திருக்கிறார்கள் என்று கணிக்க முடிகிறது.

ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளிலும், வரலாற்று அனுபவத்திலும் இலங்கை முஸ்லிம்கள் உணர்ச்சி வேகம் கூடியவர்கள் என்பதையும், அச்ச உளவியல் அமையப் பெற்றவர்கள் என்பதையும் இத்திட்டத்தின் ஊக்கிகள் கண்டறிந்துள்ளனர். எனவே தான் கலவரத்துக்கான காரணர்களாக முஸ்லிம் இளைஞர்களை நிரூபிக்க முடியும் என்று நம்புகிறார்கள். முஸ்லிம் சமூகத்துக்கு மார்க்க விடயங்களில் உணர்ச்சி வேகமும், வியாபார விடயங்களில் அச்ச உளவியலும் தவிர்க்க முடியாத அம்சங்களேயாகும்.

இவ்வாறான கலவரம் ஒன்றை ஏற்படுத்த முடியுமானால் அது முஸ்லிம்களை மட்டுமல்ல முழு இலங்கையையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். இந்த குத்தகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 'ஓப்பந்தவாதக்' குழுக்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கை அடையாமல் ஓயமாட்டார்கள் போல் தோன்றுகிறது.

**9/11** இற்குப் பிந்திய பாதுகாப்பும், பொருளாதாரமும் ஒருங்கமைந்த உலக ஒழுங்கின் அடிப்படையில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவ அமைவு புதிய வடிவெடுத்துள்ளது. இதனைக் கணக்கில் எடுத்துள்ள வெளிச் சக்திகள் பிராந்தியத்தில் தமது நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுப்பதைத் தடுக்கும் வல்லமை நமது அரசுக்குக் கிடையாது.

நிகழ்வு காலத்தில் இலங்கையை ஆளுகின்ற இரண்டு கட்சிகளில் ஒன்று தனது நாட்டை ஆளும் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள தனது சொந்த மக்களில் தங்கியிருப்பதிலும் பார்க்க, சர்வதேச சக்திகள் அவற்றின் இந்து மாக்கடல் பிராந்திய நலன் சார்ந்து வகுக்கும் உபாயங்களுடனும், நிகழ்ச்சி நிரலுடனும் ஒத்துப் போவதை வழக்கமாகக் கொண்ட கட்சியாகும்.

மற்றையது இலங்கையின் பெருந்தேசிய உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டு, பௌத்த சிங்களவர்களின் நலன் பேணுவதன் மூலம் நாட்டை ஆளும் அளவுக்கு வாக்குகளை வசூலித்துக் கொள்ள முடியும் என நம்புகிற கட்சியாகும்.

முஸ்லிம்களை வன்முறைக்கு இரையாக்கும் நாசகாரத் திட்டம் வெளியாரின் உபாயமாக இருந்தால், இத்திட்டத்தை முறியடிப்பதற்கு ஆளும் கட்சிகளில் ஒன்று எவ்விதக் கரிசனையும் கொள்ளாது, எஜமான விசுவாசத்தைக் காட்டுவதிலே தான் கண்ணாயிருக்கும்.

இந்த முஸ்லிம் விரோதத் திட்டத்திற்கு பௌத்த சிங்களப் பெரும்பான்மை வாசனை பூசப்பட்டிருப்பதால் கூட்டரசின் மற்றைய பங்காளிக் கட்சியும் தன்னைக் காத்துக் கொள்வதற்கே அன்றி முஸ்லிம்களைக் காப்பாற்ற முனையாது.

மேற்சொன்ன இரு கட்சிகளினதும் நிலைப்பாடு காரணமாகத்தான் ஜனாதிபதியும், பிரதமரும் முஸ்லிம் அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திப்பதைத் தவிர்த்து அமைச்சர் சாகல ரத்னாயக்காவின் கம்பத்துக்குள் பந்தை உதைத்து விட்டு வெளிநாடுகளுக்குப் பறக்கிறார்கள்.

முஸ்லிம்கள் மீது சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் தொட்டு இருந்து வருகிற வியாபார வெறுப்பு மட்டும் போதாது, புதிய உலக அளவில் வியாபித்து வருகிற இஸ்லாமிய மத வெறுப்பையும் சேர்த்து இலங்கையில் தீக்கங்குகளாக கக்கினால்தான் கலவரத்துக்குக் குத் தூபமிட முடியும் என்று, திட்டமிட்டவர்கள் திட்டவட்டமாக நம்புகிறார்கள் என்பது மட்டும் திரைகிழுற்றுத் தெரிகிறது.

ஒவ்வொரு முறையும் பள்ளிகள் எரிக்கப்படும் போதும் இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் சிலர் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்துள்ளார்கள் என்ற செய்திகள் உள்நோக்கோடு பரப்பப்படுகின்றன. தற்போதும் காத்தான்குடியில் இருந்தும், வாழைச்சேனையில் இருந்தும் ஐ.எஸ். இயக்கத்தில் முஸ்லிம் இளைஞர்கள் முப்பது பேர் இணைந்துள்ளதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

கலவரத் திட்டம் சாத்தியமானால், இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்துக்குப் பாயும். முஸ்லிம்கள் அகதிகளாவது மட்டுமல்ல கிழக்கில் சன நெருக்கடி தோன்றும். இதனால் தமிழ் - முஸ்லிம் முரண்பாடு ஆழமாகி இன்னொரு இனக் கலவரமும் காணிச் சண்டையும் ஏற்படும் வாய்ப்புண்டு. அகதிகளின் பராமரிப்பாளர்களாகவும், போசகர்களாகவும், பாதுகாவலர்களாகவும் இருக்கும் கிழக்கு முஸ்லிம்கள் தங்கள் வளங்கள் பங்கிடப்படுவதைக் காலப் போக்கில் சகிக்காது போனால் சமூக உள் முரண்பாடு தோன்றும்.

இந்நிலைமை ஒட்டு மொத்த முஸ்லிம்களையும் நாடற்றவர்களாக ஆக்குவதோடு, மாபெரும் தீவிரவாத வன்முறைகள் வெடித்து நாடே சுக்குநூறாகும் சூழ்நிலை தோன்றும். மேலும் இன்று மஸ்ஜித்களுக்கும், வியாபாரத் தலங்களுக்கும் வைக்கும் நெருப்பு எதிர்காலத்தில் இலங்கைத் தீவையே எரித்து நீறாக்கும். முஸ்லிம்களின் தலையில் வைக்கும் தீ தேசத்தின் தேகத்தில் இடும் தீயாகும்.

மேற்காணும் ஆபத்தை இல்லாது செய்ய இதுவரை விலை போகாதிருக்கும் புத்தி ஜீவிகள் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தை அவசரமாகத் தொடங்க வேண்டும். ஏலவே இனப்பிரச்சினை காரணமாக மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தில் இரண்டு தலைமுறையினரின் வாழ்வைத் தொலைத்த அனுபவத்தைக் கொண்ட நாம் இன்னும் முப்பது வருடங்களைத் தாங்கமாட்டோம்.

அரசாங்கத்தை அமைத்துள்ள பெரிய கட்சிகளின் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் நாட்டுப் பற்றாளர்களாக நடித்துக் கொண்டு, நாடு நாசமாகிப் போனாலும் பரவாயில்லை, தொடர்ந்து நமது கட்சி ஆட்சியில் அமர்ந்திருந்தால் சரி என்ற நிலைப்பாட்டில் இருந்தால் மக்களில்லாத நாடே எஞ்சும் என்பதை உணர்ந்து விழிப்படைய வேண்டும்.

தற்காலத் தலைவர்களே, நீங்கள் உங்களுக்கு முன்பிருந்த தேசியக் கட்சிகளின் தலைவர்கள் பின்பற்றிய எல்லாம் முடிந்த பின் கண் திறந்து பார்க்கும் **1956, 1977, 1983** ஆம் ஆண்டுகளின் 'நிஷ்ட்டைத்' தந்திரத்தைப் பின்தொடரக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நிகழும் பெருந்துயர் பற்றி இது வரை எதுவுமே கூறவில்லை. இவர் லப் பதிலேதும் இல்லை என்பதை விளங்கிக் கொள்ளாமல் அவர்களைச் சந்திக்கத் தவம் கிடத்தல், பௌத்த போதகர் உடை அணிந்து கொண்டு வன்முறைக்குத் தூண்டும் நச்சரவங்களை உணர்ச்சி பொங்க வைத்து தொலைத்தல் போன்ற வழமையான காற்றில் கலந்து காணாமல் போகும் நடவடிக்கைகளை நிறுத்தி, நீங்கள் போராட வேண்டும். இப்போராட்டத்திற்கு முதலில் 'நப்சு' துறந்து தயாராக வேண்டும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கோரி முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமித்து பாராளுமன்றைப் பகிஷ்கரித்துப் பிரச்சினையின் தீவிரத்தை உலகுக்கு உரத்துக் கூறலாம். பாராளுமன்ற முன்றலில் கொடி பிடித்துக் கோசமிட்டு தேசிய, சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்து நிவாரணம் தேடலாம். தங்களின் ஜனநாயகப் போராட்டத்துக்கு ஏனைய சிங்கள தமிழ் முற்போக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோரலாம். பாராளுமன்றம் கூடும் வேளை நடுவில் அமர்ந்து நியாயம் கேட்கலாம். முக்கிய சட்டம் ஒன்றை அரசு நிறைவேற்ற முற்பட்டால் ஆதரவை மறுக்கலாம், அல்லது எதிர்த்து வாக்களிக்கலாம். எதுவுமே எடுபடவில்லை என்றால் அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டுப் பின் ஆசனங்களில் அமரலாம். மக்கள் பிரதிநிதிகள் பல முறைகளில் போராடி வழி காட்டிய பின்னர்தான் மக்களைப் போராட்டத்துக்கு அழைக்க வேண்டும். இவைகளைச் செய்வதற்கு முஸ்லிம் தலைவர்கள் அணிந்திருக்கும் இயக்க அலங்கார ஆடைகளைக் களைய வேண்டும். தாங்கள் அணிந்திருக்கும் அரச அனுசரணை எனும் கௌரவ ஆபரணத்தையும் கழற்றி வீச வேண்டும்.

கலவர முஸ்தீபுகளைக் கண்டு கொள்ளாது விட்டால் நாடு கொள்ளாது. தூரத்து இடியும், முழக்கமும் நமது வாசல் படியில் வாசம் செய்ய அனுமதிப் போமானால் அப்பாவி மக்களைத் தீவிரவாதம் கொல்லாது விடாது.

இறுதியில், இந்தியா தலைமையில் பாக்கிஸ்தான் உள்ளிட்ட பன்னாட்டு அமைதிப்படை இலங்கைக்கு வந்து இலங்கையர்களை இலங்கையர்களிடம் இருந்து பாதுகாக்கவேண்டிய ஆசியாவின் ஆச்சரியம் நடந்தேறவும் கூடும்.



இன்னொரு யுத்தத்தையும் வெல்ல முடியும் என்று இறுமாந்து, வாளாதிருக்க முடியாது. இன்றுவரை சிங்களப் பெரும்பான்மை மக்களுக்குள் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருப்பவர் என்ற வகையிலும், தேர்தல் அரசியலில் ஒரு சூடு கண்ட பூனை என்ற வகையிலும் மக்களுக்கு ஆபத்தின் விளைவை விளக்க முன்வர வேண்டும்.

இவர் தன்னை முன்னிறுத்தி அரசியல் இலாபம் தேடும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் மக்கள் பிரதிநிதிகளைக் களத்தில் இறக்கி சிங்கள மக்களை விழிப்பூட்டும் வேலையைச் செய்ய உத்தரவிட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தர் இவ்விடயத்தில் இதுவரை இருந்தது போல் அசமந்தமாக இருக்க முடியாது. என்றுமே நிகழ முடியாத பெருங்கனவொன்றை விதைத்து ஒரு தமிழ்த் தலைமுறையையே ஆயுத வன்முறைக்குள் அகப்படுத்திய அரசியல் தலைவர்களுள் இன்னும் உயிரோடு இருக்கும் இவர் தனது அனுபவப் பகிர்வைச் செய்யும் கடப்பாடுடையவர், ஆகையால் இவரும் இவர்தம் மக்கள் பிரதிநிதிகளும் நாட்டுக்கு அனுபவ உபதேசம் செய்தல் வேண்டும்.

முஸ்லிம் தலைவர்களும், அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அறிக்கைகள் விடுதல், எரிந்த இடங்களைக் கோர்ட்டும் சூட்டும் அணிந்தபடி சென்று பார்வையிடல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறல், இளைஞர்களே அணி திரளுங்கள் என்று பக்குவமற்ற முறையில் வாயால் கண்ணிவெடி புதைத்தல், ஜனாதிபதிக்கும்- பிரதமருக்கும் இவ்விடயத்தில் நமக்குச் சொல்



# நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும் ஏற்படுத்த முற்படும் சக்திகளுக்கு அரசு இடமளிக்காது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க




பிரிவினை வாதத்தை உருவாக்குவதற்கு முயற்சித்து தோல்வி கண்ட சில குழுக்கள் மத வாதத்தை முன்னெடுத்து சென்று நாட்டில் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் முயற்சிகளில் முற்படுகிறார்கள். அதேநேரம், இனவாதத்தையும் உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கூறினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்றிட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்திய இளைஞர் யுவதிகளை பாராட்டுவதற்காக அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் பேசிய அவர் கூறியதாவது, இலங்கையர்களை பிரிப்பதற்கு இடமளிக்க முடியாது. சமயம் என்பது எல்லோரையும் ஒன்று சேர்க்கும் சந்தர்ப்பம் ஆகும். மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் திட்டம் அல்ல. மதவாதம், இனவாதத்தை சிலர் ஏற்படுத்த முயற்சிப்பதாயின் அதனை உடனடியாக நிறுத்தவேண்டும். இந்த முயற்சி எல்லோருடைய கடமையாகும். சமாதானத்தை பாதுகாப்பது எல்லோருடைய பொறுப்பாகும். கிறிஸ்தவ, இஸ்லாம், இந்து, பௌத்த மதங்கள் எதுவும் வைராக்கியத்தை ஏற்படுத்துமாறு கூறவில்லை. நாம் எப்படி பேசவேண்டுமென பௌத்த சமயம் எங்களுக்கு போதிக்கின்றது. நாம் பயன்படுத்தவேண்டிய வசனங்கள் பற்றியும் பௌத்தம் எங்களுக்கு போதித்துள்ளது. நாம் பௌத்தராவது எமது மனதை சரிப்படுத்தினால் மட்டுமே. பௌத்தத்துக்கு பொருத்தமான வகையில் பேசாவிடின் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதாயின் மனதை கட்டுப்படுத்தாவிடின், அவர்களது பெறுமானம் என்ன? மோசமானவர் யார், நல்லவர் யார் என தெளிவாக புத்த பெருமான் தனது போதனையில் தெரிவித்திருக்கிறார். அதேபோன்று தான் கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் மதங்கள் போதித்திருக்கின்றன. நாம் மதவாத இனவாதத்தை முற்றாக கண்டிப்பதோடு, அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்போம். எவராவது சட்டத்தை மீறி செயற்பட்டால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பொலிஸாரின் கடமையாகும். அதற்கான, முழுப் பொறுப்பையும் பொலிஸாருக்கு வழங்கியுள்ளோம்.

தேசிய இளைஞர் தின நிகழ்வில் பிரதான பரிசினை யாழ்.மாவட்டம் பெற்றுகொண்டதனையிட்டு நான் சந்தோஷப்படுகின்றேன். 15 வருடங்களுக்கு முன்பு இந்த இளைஞர் தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தால் யாழ்ப்பாணத்தில் எவரும் இருந்திருக்க மாட்டார்கள். நான் வார இறுதியில் யாழ்ப்பாணம் மன்னார் பகுதிகளுக்கு சென்றேன். மீண்டும் சமாதானம் கட்டியெழுப்பப்படுவதனை அங்கு அவதானிக்க முடிகின்றது என பிரதமர் கூறினார்.

# கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஜுலை முதல் புதிய நடைமுறை

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விமான ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய பாதுகாப்பு நடைமுறையொன்றை செயற்படுத்தவுள்ளதாக விமானநிலைய மற்றும் விமானசேவை நிறுவனத்தின் அதிகாரி எச்.எஸ்.ஹெட்டியாரச்சி நேற்றையதினம் தெரிவித்தார்.

புதிய பாதுகாப்பு நடைமுறைகளுக்கமைய விமான பயணி ஒருவர் தனது கைப்பையினுள் கொண்டு வரக்கூடிய திரவங்கள், ஸ்ப்ரே வகை, ஜெல் வகைகள் ஆகிய பொருட்களின் அளவினை மட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நீர், பான வகைகள், சூப், ஜேம், சோஸ், திரவ வகைகள், க்ரீம், மருந்துகள், எண்ணெய், வாசனைத் திரவியம், ஸ்ப்ரே, ஜெல் வகைகள், காற்று அழுத்தம் அதிகமாக கொடுக்கும் கொள்கலன்கள், சவறுநுரை வகைகள், வேறு நுரை வகைகள், கண் இமைக்கான அழகு சாதன வகைகள், அறை வெப்பங்களை பராமரிக்கும் திரவங்கள், நீராவி திரவ வகை பொருட்கள் இதற்குள் உள்ளடங்கும்.

அதற்கமைய குறித்த அனைத்து பொருட்களும் ஒரு லீற்றருக்கு மேல் அதிகரிக்க கூடாது. ஒரு பயணியினால் அந்த பை ஒன்று மாத்திரமே கொண்டு செல்ல முடியும். இதற்கு மேலதிகமாக கொண்டு செல்லும் திட்டம் இருந்தால் அவற்றினை விமான டிக்கட் ஒப்படைக்கும் இடத்தில் ஒப்படைக்கப்படும் பயண பைகளுடன் எடுத்து செல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.

# கென்பராவில் ஜனாதிபதி மைத்திரிக்கு அமோக வரவேற்பு





அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்ன்புல்லின் அழைப்பையேற்று மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு அவுஸ்திரேலியா பயணமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றையதினம் கென்பராவைச் சென்றடைந்தார்.

ஆளுநர் நாயகத்தின் உத்தியோகபூர்வ செயலாளர் மார்க் பிரேசர், கல்வி அமைச்சரும் செனட் சபை உறுப்பினருமான சிமோன் பேர்மிங்ஹம், ஆளுநர் நாயகத்தின் பிரதிச் செயலாளர் எலிசபெத் கெலி ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

ஜனாதிபதியுடன் இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடவும் இருதரப்பு கூட்டுறவை மேலும் விரிவுபடுத்துவதற்கான அவரது கருத்துக்களை அறிந்து கொள்ளவும் பிரதமர் மெல்கம் டேர்ன்புல் எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதியை வரவேற்ற செனட் சபை உறுப்பினர் பேர்மிங்ஹம் தெரிவித்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க, பிரதி அமைச்சர்களான ஹர்ஷ டி சில்வா, அஜித் பி பெரேரா பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா, ஜனாதிபதியின் பொதுத் தொடர்புகள் பணிப்பாளர் நாயகம் சாந்த பண்டார ஆகியோர் ஜனாதிபதியுடன் இப்பயணத்தில் இணைந்து கொண்டனர்.

தனது நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அவுஸ்திரேலியப் பிரதமர் மெல்கம் டேர்ன்புல் ஜனாதிபதிக்கும் விடுத்திருக்கும் இவ்வழைப்பானது அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவில் ஒரு புதிய திருப்பமாகும் என இலங்கை உயர்ஸ்தானிகர் சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிற்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு மகோகனி மரத்தை நட்டு வைத்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி கென்பரா நகரில் மகோகனி மரத்தை நாட்டி வைத்ததோடு, நினைவுப்புத்தகத்திலும் கையொப்பமிட்டார்.

கென்பரா நகரில் அமைந்துள்ள சூரிய சக்தி மின் நிலையத்தையும் பார்வையிட்டார்.

# நல்லாட்சியின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு இனவாத செயல்கள் பாரிய இடையூறு

## சபையில் டக்ளஸ் தேவானந்தா

**(அ.அருண் பிரசாந்த்)**

நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகள் நல்லாட்சி அரசின் நல்லிணக்க பயணத்துக்கு பாரிய இடையூரை ஏற்படுத்தியுள்ளது என்று ஈ.பி.டி.பியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா நேற்று பாராளுமன்றில் ஆதங்கம் வெளியிட்டார்.

மேலும், இதனைக் கட்டுப்படுத்த அரசு துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

பாராளுமன்றில் நேற்று 23 இன் கீழ் 2 இல் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் குறிப்பிட்ட அவர்,

அம்பாறை மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைப்பதற்கு முயற்சி செய்த சம்பவத்துடன் இனவாத நடவடிக்கைகள் மீண்டும் நாட்டில் தலைதூக்கியுள்ளன. இந்தக் காலப்பகுதியில் சுமார் 40 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

அத்தோடு, கடந்த 19ஆம் திகதி தெற்கிலிருந்து வந்த ஒரு குழுவினர் கிளிநொச்சி நகரத்தில், தேசியக் கொடியில் தமிழ், முஸ்லிம் மக்களை குறிக்கும் நிறங்களை அகற்றிவிட்டு தனி சிங்கக் கொடியையும் பறக்க விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் மீண்டும் நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் சூழ்நிலையில் அதனை குழப்பும் வகையில் செயற்படும் இவ்வாறானவர்களுக்கு எதிராக அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## குருநாகல் பள்ளிவாசலுக்கு இன்று பேரீச்சம்பழ விநியோகம்

**(குருநாகல் நிருபர்)**

புனித றமழான் மாதத்தை முன்னிட்டு குருநாகல் மாவட்ட பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கப்படவுள்ள பேரீச்சப்பழ விநியோகம் இன்று(25) குருநாகல் பஸார் பெரிய பள்ளியில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட பள்ளிவாசல்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இன்றையதினமே அவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் குருநாகல் பெரிய பள்ளி நிர்வாகம் கேட்டுகொண்டுள்ளது.




ஐக்கிய அரபு இராச்சியத்தின் ரெட் கிறசண்ட் சங்கம் இவ்வருட புனித நோன்பை முன்னிட்டு நோன்பாளிகளுக்கு வழங்கவென ஒரு தொகுதி பேரீச்சம் பழங்களை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கையளித்துள்ளது. மேற்படி கையளிக்கும் வைபவம் நேற்று கொழும்பு 7 இல் உள்ள இலங்கைக்கான ஐக்கிய இராச்சியத்தின் தூதரகத்தில் வைத்து தூதரகத்தின் தூதுவர் அப்துல் ஹமீட் ஏ. கே. அல்-முல்லா திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் மௌலவி நூறுல் அமீன் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்தார். கிடைக்கப்பெற்ற பழங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாத பள்ளிகளுக்கும், குறைவாக வழங்கப்பட்ட பள்ளிகளுக்கும் திணைக்களத்தினூடாக உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(படம் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு 26இல் ரமழான் விடுமுறை

**(மினுவாங்கொடை நிருபர்)**

நாட்டிலுள்ள சகல அரச முஸ்லிம் பாடசாலைகளும், புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் சிரேஷ்ட பணிப்பாளர் இஸட். தாஜுதீன் தெரிவித்தார்.

இப் பாடசாலைகள் மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனித ரமழான் நோன்பை முன்னிட்டு, தனியார் மற்றும் சர்வதேச முஸ்லிம் பாடசாலைகளுக்கும் இக் காலப்பகுதியில் விடுமுறை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானிய மாணவர்கள் இலங்கைக்கு வருகை

இரு நாடுகளையும் சேர்ந்த மாணவர்களுக்கிடையிலான நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் பாகிஸ்தானின் லாகூர் நகரிலிருந்து ஷாசியா ஷாகித் என்பவரின் தலைமையில் பாகிஸ்தானை சேர்ந்த 8 மாணவர்கள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

நேற்று முதல் 28ஆம் திகதி வரை இவர்கள் இலங்கையில் தங்கியிருபபதோடு. இந்த மாணவர்கள் இலங்கையிலுள்ள பதில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் டாக்டர் ஷவ்றாஸ் அஹமத்கான் சிப்றானவையும் சந்தித்தனர்.

இந்த நிகழ்வு இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் நிலையத்தில் இடம்பெற்றது.

இவர்கள் கண்டி மற்றும் காலி பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.



## முஸ்லிம் சிறைக்கைதிகளுக்கான றமழான் விசேட ஏற்பாடுகள்

**(குருநாகல் நிருபர்)**

வாரியபொல சிறைச்சாலையிலுள்ள முஸ்லிம் சிறைக்கைதிகளுக்கான றமழான் ஏற்பாடுகளை வழமைபோன்று இம் முறையும் குருநாகல் பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

முஸ்லிம் கைதிகளை தனியான வாட்டில் தங்கவைப்பதற்கும் அவர்களுக்கான ஸஹர் செய்வதற்கான உணவு வசதிகளையும், நோன்பு திறப்பதற்கான வசதிகளையும், இடையிடையே கைதிகளுக்கான பயான் நிகழ்ச்சிகளையும் பெருநாள் தொழுகைக் கான ஏற்பாடுகளையும் குருநாகல் பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் ஒவ்வொரு வருடமும் செய்து வருகின்றது.

## முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு ரமழான் விசேட விடுமுறை ஒழுங்கு

**(மினுவாங்கொடை நிருபர்)**

புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு, அரச துறையில் பணி புரியும் முஸ்லிம்களுக்கான விசேட விடுமுறை மற்றும் சமய வழிபாட்டு நேரங்களை உள்ளடக்கிய சுற்றறிக்கை ஒன்றை, அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு வெளியிட்டுள்ளது.

ரமழான் நோன்பு காலத்தில், முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு தொழுகை மற்றும் இதர மத வழிபாடுகளில் குறைபாடுகளின்றி ஈடுபடுவதற்கு வசதியாக விசேட நேர ஒதுக்கீட்டு அனுமதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறும், சகல அதிகாரிகளையும் அமைச்சு கேட்டுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச திணைக்களங்கள் மற்றும் செயலகங்களின் பிரதானிகள் ஆகியோரிடமே சுற்றறிக்கை மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

நோன்பு காலப் பகுதிக்குள் அதிகாலை 3.30 மணி முதல் காலை 6 மணி வரையிலும், மாலை 3.15 மணி முதல் 4.15 மணி வரையிலும், மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரையிலும், இரவு 7.30 மணி முதல் 10.30 மணி வரையிலும் நேரங்களை ஒழுங்கு செய்து கொடுக்குமாறும், இதேவேளை தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் விசேட விடுமுறைகளை அங்கீகரிக்குமாறும் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி சுற்று நிருபத்தின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் சம்பவங்களை தவிர்க்கவும்

## பதில் பொலிஸ்மா அதிபர் அதிகாரிகளுக்கு பணிப்பு

தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேசங்களுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் எழுத்து மூலம் இந்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.


பிரதேசங்களில் சட்டம், அமைதியை உரிய முறையில் பேணுவதோடு, மத, வர்க்க மற்றும் இன நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் சீ.டி.விக்ரமரத்ன கூறியுள்ளார்.

மேலும், இது போன்ற சம்பவங்கள் ஏற்படின் சட்டத்தை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், அவ்வாறு சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தாத பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் சில, அண்மைக் காலங்களாக பல இடங்களில் பதிவாகியுள்ளதாகவும், இது போன்ற செயற்பாடுகள் மீள ஏற்படாது இருக்க பதில் பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்ன பணிப்புரை விடுத்துள்ளதாகவும் பிரியந்த ஜெயக்கொடி மேலும் கூறியுள்ளார்.

# சிசேரியன் எப்போது தேவைப்படும்

இயல்பான பிரசவத்தில் கர்ப்பப்பை வாய் திறந்து குழந்தை வெளியே வருகிறது. அதில் சிக்கல் இருந்தால் சிசேரியன் (Caesaryan) கைகொடுக்கும். கர்ப்பிணியின் அடிவயிற்றைக் கீறி, கர்ப்பப்பையை கிழித்து, உள்ளேயிருக்கும் குழந்தையை வெளியே எடுப்பதுதான் சிசேரியன் முறை. தாய், சேய் இருவரின் உயிரையும்




காப்பாற்றுவதே இம்முறையின் அடிப்படை நோக்கம்.

தாயாகிற பெண்ணின் கூபக எலும்புக் கட்டு (Pelvic Structure) குறுகி இருந்தால் குழந்தை வரும் பாதையும் குறுகிவிடும். அதனால் இயல்பான வழியில் குழந்தை வெளிவருவது சாத்தியம் இல்லாது போகும். அந்நிலையில் சிசேரியன்தான் தீர்வாக அமையும். குழந்தையின் தலை பெரிதாகவும், தாயின் கூபக எலும்பு குறுகியும் இருந்தால் அப்போதும் சிசேரியன் சிபாரிசு செய்யப்படும். குட்டையான பெண்கள்தாம் பெரும்பாலும் இப்பிரச்சினைக்கு உள்ளாவார்கள்.

பொதுவாக, பிரசவத்தின் போது குழந்தையின் தலைதான் முதலில் வெளியே வரும். சில அசாதாரண நிலைகளில் குழந்தையின் கால் முதலில் வெளிவரத் துவங்கும். அப்போதும் பிரசவத்தை நல்ல விதமாக செய்து வைக்கவே மருத்துவர்கள் முயல்வார்கள். குழந்தையின் எடை அதிகமாக இருந்தாலோ, உடல் கனமாக இருந்தாலோ, குழந்தைப் பிறப்புப் பாதையில் ஏதேனும் தடங்கல் ஏற்பட்டாலோ சுகப்பிரசவம் சாத்தியப்படாது. சிசேரியன் அவசியமாகிவிடும்.

பிரசவத்தின்போது குழந்தைக்கு எந்தவிதத்திலாவது மூச்சுத் திணறல் ஏற்படுமானால் உடனடியாக குழந்தையை வெளியே எடுக்க சிசேரியன்தான் வழியாக அமையும்.

சுகப்பிரசவம் சிக்கலாகிவிட அநேக காரணங்கள் உண்டு. கர்ப்பப்பையில் குழந்தை குறுக்காக இருத்தல், சாய்ந்து இருத்தல், நச்சுக்கொடி முதலில் வருதல், கை முதலில் வருதல் போன்றவை மட்டுமே சிறந்த வாய்ப்பாகும்.

அடிக்கடி கருச்சிதைவான பெண்களுக்கு சுகப்பிரசவம் ஆவது கடினம். சிலருக்கு வயிற்றிலேயே குழந்தைகள் இறந்து பிறந்திருக்கும். அத்தகையவர்களுக்கு முன்னதாகவே நாள் குறித்து சிசேரியன் செய்கிறார்கள்.

தாய்க்கு இரத்த அழுத்தம் அதிகமாகி, உடம்பு முழுதும் வீங்கி இருந்தால் பிரசவத்தில் தாய்க்கு வலிப்பும், மயக்கமும் வரக்கூடும். அதனால் தாய், சேய் இருவர் உயிருக்கும் ஆபத்து நேரலாம். இதனைத் தடுக்க சிசேரியன் உதவும்.

கர்ப்பப்பை வாயில் புற்று நோய், அல்லது கர்ப்பப்பை அருகில் கட்டி இருந்தால் சிசேரியன்தான் உகந்தது.

நீரிழிவு, இருதயநோய் உள்ள கர்ப்பிணிகளுக்கு சிசேரியனையே மருத்துவர்கள் சிபாரிசு செய்வார்கள்.

ஒருமுறை சிசேரியன் செய்துகொண்ட பெண் அடுத்த முறை சிசேரியன் மூலம் தான் குழந்தை பெறவேண்டும் என்பதில்லை. ஆனால் நீடித்த நோய் உபாதை உள்ளவர்களுக்கு இரண்டாவது முறையும் சிசேரியன் செய்யும்படி இருக்கும்.

இப்போதெல்லாம் மருத்துவர்கள் யாருக்கு சிசேரியன் தேவை என்பதை முன்கூட்டியே ஸ்கேன் மூலம் கண்டறிந்து சொல்லிவிடுகிறார்கள்.

★ சிசேரியன் செய்து கொண்ட தாய் குறைந்தது ஒன்றரை மாதம் ஓய்வில் இருக்க வேண்டும்.

அதன் பிறகு வீட்டிலும், அலுவலகத்திலும் வழக்கமாக செய்கிற வேலைகளை தொடரலாம்.

★ சிசேரியனுக்குப் பிறகு மூன்று ஆண்டுகள் கருவுறாமல் இருப்பது நல்லது.

★ ஒரு தாய்க்கு மூன்று முறைக்கு மேல் சிசேரியன் செய்வதில்லை.

நீண்ட தலை

தாயின் வயிற்றில் இருந்து கருப்பாதை வழியே வெளியேறும் போது குழந்தை சில சங்கடங்களை சந்திக்க நேருகிறது. அதனால் குழந்தையின் தலை ஓரே சீராக இல்லாமல் சற்று நீண்டு இருக்கலாம். இதனை அழுத்தவோ, தேய்க்கவோ கூடாது. இரண்டு அல்லது மூன்று நாள்களில் தானாகவே சரியாகிவிடும். சாதாரணமாக சுகப்பிரசவம் ஆன குழந்தையின் தலை சப்பையாக இருக்கும். காரணம் குழந்தையின் தலை குறுகலான பாதையில் வெளிவருவதால் தலையில் அநேக மடிப்புகள் ஏற்பட்டிருக்கும். இதனால் குழந்தைக்கு யாதொரு தீங்கும் கிடையாது.



# வலி தீர வழியுண்டா?

மாதவிடாய் வரும்போது வரும் வலிக்கு Dysmenorrhoea என்று பெயர். இதனால் அன்றாட வாழ்வின் செயல்கள் பாதிக்கப்படும். அது தசைப்பிடிப்பு போல இருக்கும். கர்ப்பப்பை சுருங்கி விரிவதால் வலி அதிகமாக இருக்கும்.

சில நேரங்களில் குத்துவது போலவும், மந்தமாகவும், வாந்தி எடுக்கும் தன்மையுடையதாகவும், எரிச்சலாகவும், அழுத்தத்துடனும் காணப்படும். மாதவிடாய் குறையக் குறைய வலியும் குறையும். சில நேரங்களில் அதிக இரத்தப்போக்கு காணப்படும். இதை Menorrhagia என்று சொல்வார்கள். மாதவிடாய் காலத்தில், வேறொரு நோயால் வலி வந்தால் அதை Secondary Menorrhagia என்கிறார்கள்.

அடி வயிற்றிலேயே, தொப்புளுக்குக் கீழே வலி காணப்படும். இந்த வலி காலுக்கும், முதுகுக்கும் பரவலாம். சில பெண்கள் வாந்தி எடுக்கும் உணர்வையும், வயிற்றுப்போக்கையும், தலைசுற்றலையும், மயக்க நிலையையும் உணர்வார்கள். மயங்கி விழுந்த பெண்களும் உண்டு. ஒலி, சப்தம், மணம் போன்றவற்றால் இவர்களுடைய உடல்நிலையில் மாறுபாடு ஏற்படும்.

ஹார்மோன்களின் ஏற்றத்தாழ்வாலும், சினைமுட்டை உருவாகும் நிலையிலும் இது ஏற்படுகிறது. Endometriosis என்னும் நோயில் இது காணப்படும்.

இதைச் சரியாகக் கண்டறிய வேண்டும். கர்ப்பப்பை கட்டிகளிலும், சினைமுட்டை கட்டிகளிலும் இது வரலாம். நோயாளி கூறும் நோய் வரலாற்றை வைத்தே சாதாரண மாதவிடாய் வலியை வேறுபடுத்த முடியும்.

மாதவிடாய் கால வயிற்று வலியின் போது வயிற்றில் ஈரத்துணி போடலாம். வயிற்றை சுற்றிலும் விளக்கெண்ணெய் தடவலாம்.

கருப்பை கோளாறுகளை தவிர்க்க வாழைப்பூ சாறு, பொரியல் வாரம் ஒரு முறை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளைப்படுதலை தடுக்க முருங்கைக் கீரை, தயிர் சேர்க்கவும். கத்தரிக்காயை அடிக்கடி உணவில் சேர்ப்பதை தவிர்க்கவும்.

முருங்கைக் கீரை சூப், முடக்கத்தான் கீரை சூப், மணத்தக்காளிக் கீரை சூப் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை தினமும் உணவில் சேர்க்க வேண்டியது அவசியம். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் கலந்த பொடி வகை அல்லது மாத்திரை எடுத்துக் கொள்வதன் மூலம் கருப்பை தொந்தரவால் உண்டாகும் முழங்கால் வலி, இடுப்பு வலி ஆகியவற்றை தடுக்கலாம்.

ஆலமரப்பட்டையை பொடி செய்து பாலில் கலந்து குடித்து வந்தால் கருப்பை வீக்கம் குணமாகும். ஆலமர இலைகளை பொடி செய்து வெண்ணெயில் குழைத்து சாப்பிட்டால் மாதவிலக்கு கோளாறுகள் குணமாகும்.

இஞ்சி சாற்றில் தேன் கலந்து குடித்தால் வயிற்று வலி குணமாகும். இத்திப் பிஞ்சை, சீரகம் சேர்த்து அவித்து சாப்பிட்டால் அதிக ரத்தப்போக்கு குறையும். இம்பூறல் வேர்ப்பட்டை 10 கிராமுடன் பெருங்காயம் ஒரு கிராம் சேர்த்து கஷாயம் வைத்துக் குடித்தால் மாதவிலக்கு கோளாறுகள் தீரும்.




# மயக்கம் சொல்லும் கதை என்ன?

நாம் நன்றாக இருக்கும்போதே திடீரென்று கண்கள் இருட்டிக்கொண்டு வர, நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாத அளவுக்கு மூளை வேலை நிறுத்தம் செய்ய, தடாலடியாகக் கீழே சாய்ந்து விழும் உடல் சார்ந்த மயக்கத்தை யாரும் விரும்புவதில்லை.

### மயக்கத்தின் வகைகள்

உடல் சார்ந்த மயக்கத்தில் சுருக்கு மயக்கம் (Fainting/ Syncope), 'நெடு மயக்கம் (Unconsciousness) என இரு வகை உண்டு. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மக்கள் அதிகமாக நடமாடும் பொது இடங்களிலும் அலுவலகங்களிலும் திடீரென்று யாராவது மயக்கமடைந்து தரையில் விழுவதைப் பார்த்திருப்பீர்கள். குறிப்பாகப் பள்ளிகளில் காலை இறைவணக்கம் நிகழ்ச்சி நடைபெறும்போது மாணவர்கள், இவ்வாறு மயக்கமடைவது வழக்கம். இதைக் சுருக்கு மயக்கம்? என்கிறோம்.

### ஏற்படுவது எப்படி?

மூளைக்குத் தேவையான இரத்தம் செல்லத் தடை உண்டாவதுதான் குறு மயக்கம் ஏற்பட அடிப்படைக் காரணம். ஏதாவது ஒரு காரணத்தால் இரத்த ஓட்டம் சில நிமிடங்களுக்கு இடுப்புக்குக் கீழே நின்று விடுகிறது. மூளைக்குச் செல்லும் இரத்தம் குறைகிறது. இதனால் மயக்கம் ஏற்படுகிறது. மயங்கித் தரையில் விழுந்ததும் இரத்த ஓட்டம் சரியாகி விடுகிறது. இதனால் மயக்கமும் சரியாகி விடுகிறது.

### காரணம் என்ன?

உணவைச் சாப்பிடாமல் பள்ளிக்கு வருவது முதல் காரணம். இதனைப் பசி மயக்கம் என்று கூறுகிறோம். இரவுத் தூக்கம் தேவையான அளவுக்கு இல்லாதது அடுத்த காரணம். ஒரே இடத்தில் அதிக நேரம் நிற்பது மூன்றாவது காரணம். குறிப்பாக, வெயிலில் நீண்ட நேரம் நின்றால் மயக்கம் வரும். உடல்



சோர்வு, இந்த மயக்கத்தை வரவழைக்கும்.

அளவுக்கு அதிகமாக விளையாடுவது, உடற்பயிற்சி செய்வது, ஓடுவது போன்றவற்றாலும் குறு மயக்கம் வரலாம். உணவு புரையேறுதல், தொண்டை அடைத்துக் கொள்ளுதல் ஆகிய காரணங்களும் இவ்வகை மயக்கத்தை வரவேற்கும். மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள, காற்றோட்டம் குறைந்த இடங்களில் அதிக நேரம் இருந்தாலும் இந்த மயக்கம் வருவதுண்டு.

### உளவியல் காரணங்கள்

வீட்டுப் பாடங்களை முடிக்காமல் பள்ளிக்கு வருவதால் ஏற்படும் பயம், தேர்வுப் பயம், ஆசிரியர் மீதான பயம், பதற்றம், மன அழுத்தம் போன்ற காரணங்களாலும் குறு மயக்கம் ஏற்படுவதுண்டு.

மனக் கவலை, இழப்பு, சோகம், திகில், அதிர்ச்சி போன்ற உளவியல் காரணங்களால் வயதில் பெரியவர்களுக்குக் குறு மயக்கம் ஏற்படுகிறது. இறப்பு, இழப்பு போன்ற அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்டதும் மயக்கம் வருவது, இதற்குச் சரியான எடுத்துக்காட்டு. நீண்ட நேரம் அழும்போது ஏற்படும் குறு மயக்கமும் இதைச் சேர்ந்ததுதான்.

### நோய்களும் காரணமாகலாம்

இடைவிடாத இருமல் சில நிமிடங்களுக்கு நீடிக்கும்போது, வேகமாக எழுந்திருக்கும்போது இந்த மாதிரி குறு மயக்கம் ஏற்படுவதுண்டு. நீண்ட நேரம் சிறுநீர் கழிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்குச் சிறுநீர் கழித்து முடித்ததும் மயக்கம் வரும். கழுத்து எலும்பில் பிரச்சினை உள்ளவர்கள் தலையை ஒரு பக்கமாகச் சாய்க்கும்போது குறு மயக்கம் வரலாம்.

வாந்தி, வயிற்றுப்போக்கு காரணமாக உடலின் நீர்ச்சத்து குறைந்து விடும் போதும், உயரமாக ஏறும்போதும் மயக்கம் வரலாம். வெயிலில் அதிகமாக அலைவது, கடுமையான உடல் வலி, இரத்தசோகை, சத்துக்குறைவு, உணவு ஒவ்வாமை ஆகிய காரணங்களாலும் குறு மயக்கம் வருவதுண்டு.

### என்ன அறிகுறி?

நின்ற நிலையிலோ உட்கார்ந்த நிலையிலோ இருக்கும் ஒருவர் திடீரென்று நினைவிழந்து, மயங்கி விழுவார். அடுத்த சில நிமிடங்களில் மயக்கம் தெளிந்து அவராகவே எழுந்து கொள்வார். மயக்கத்திலிருந்து விடுபட்டதும் சில நிமிடங்களுக்குக் கைகால்களில் நடுக்கமும் தசைத்துடிப்பும் ஏற்படும்.

### எச்சரிக்கை அறிகுறிகள்

சிலருக்குக் குறு மயக்கம் ஏற்படுவதற்கு முன் படபடப்பு ஏற்படும். அடிக்கடி கொட்டாவி வருவது, ஊசி குத்துவது போன்ற உணர்வு, வியர்ப்பது, மூச்சு வாங்குவது, வாயைச் சுற்றி மதமதப்பு முதலிய அறிகுறிகள் தோன்றுவதுண்டு. இவை ஏற்பட்டவுடன் தரையில் அல்லது படுக்கையில் படுத்து விட்டால் குறு மயக்கம் வராது.

### முதலுதவி என்ன?

மயக்கம் அடைந்தவரை அப்புறப்படுத்தி, உடனடியாக நல்ல காற்றோட்டமான இடத்துக்குக் கொண்டு செல்லுங்கள். ஆடைகளின் இறுக்கத்தைக் கொஞ்சம் தளர்த்திவிடுங்கள்.

தலை கீழேயும் பாதங்கள் மேல்நோக்கியும் இருக்குமாறு தரையில் படுக்க வையுங்கள்.

சில நிமிடங்களுக்குப் பாதங்களை உயர்த்திப் பிடித்துக்கொள்வது நல்லது.

தலைக்குத் தலையணை வைக்கக் கூடாது. பதிலாக, பாதங்களுக்கு அடியில் வைத்துக் கொள்ளலாம். முகத்தில் சுளீர் என தண்ணீர் தெளியுங்கள். அப்படிச் செய்யும்போது முகத்தின் நரம்புகள் தூண்டப்படுவதால், மூளை நரம்புகளும் வேகமாக வேலை செய்யும். அப்போது மயக்கம் தெளிந்துவிடும்.

மயக்கம் தெளிந்த பின், குளுகோஸ் தண்ணீரில் சிறிதளவு உப்பைக் கலந்து குடிக்கத் தரலாம். ஐந்து நிமிடங்களுக்குள் மயக்கம் தெளியாவிட்டால் அது நெடு மயக்கமாக இருக்கலாம். இதற்கு மருத்துவர் உதவியை நாடுவதே நல்லது.




## எகிப்தின் அஸ்வான் அணை

அஸ்வான் அணை எகிப்து நாட்டிலுள்ள நைல் ஆற்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இரண்டு அணைகளைக் குறிக்கும்.



இவை அஸ்வான் என்னும் நகரில் உள்ளன. இவற்றுள் புதிய அணை அஸ்வான் மேல் அணை எனவும், பழையது அஸ்வான் கீழ் அணை எனவும் அழைக்கப்படுகின்றன.

1950களிலிருந்து அசுவான் அணை என்ற பெயர் மேலணையையே குறிக்கின்றது. 1952 எகிப்தியப் புரட்சியை அடுத்து உருவான எகிப்திய அரசு நைல் ஆற்றினால் சுற்றுப் புறங்களில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கவும், மின் உற்பத்தி செய்யவும், வேளாண்மைக்கு நீர் வழங்கவும் மேல் அணையைக் கட்டமைக்க திட்டமிட்டது. இது எகிப்தின் தொழில்மயமாக்கலுக்கு முதன்மைப் பங்காற்றியது.

1960க்கும் 1970க்கும் இடையே கட்டப்பட்ட அசுவான் மேல் அணை எகிப்தின் பொருளியல் வளர்ச்சியிலும் பண்பாட்டுக் கூறுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

# பகுத்தறிவோடு பயில்வோம்

ஆசிரியர் ஒரு நாள் வகுப்பறையில் பாடம் நடத்திகொண்டிருக்கும் போது மாணவர்களிடம் இந்த கேள்வியை கேட்டார்.

''மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் இருக்கிறதா உங்களுக்கு? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழி வாங்கத் துடிக்கிறீர்களா, நீங்கள்?'' - மாணவர்களிடம் கேட்டார் ஆசிரியர்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'ஆமாம்... சேர்



என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு, ஒவ்வொருவராக அழைத்து ''மன்னிக்கவும் மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன?'' என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஐந்து, பத்து என்று அடுக்கி கொண்டே சென்றார்கள்

மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரிய வைக்க நினைத்தார். ஒவ்வொரிடமும் ஒரு பையை கொடுத்தார் . வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டுவரப்பட்டது. யார் மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ அத்தனை தக்காளிகளை தாங்கள் பையில் எடுத்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்த தக்காளி பையை எப்போதும் உங்களுடன் கூடவே இருக்கவேண்டும், தூங்கும் போதும் அருகிலேயே வைத்திருக்கவேண்டும் என கட்டளையிட்டார். ஒன்றும் அறியாமல் தலையை ஆட்டினார்கள் மாணவர்கள் .

ஓரிரு நாட்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் தக்காளிகள் அழுகி நாறத் துவங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். ஒரு கட்டத்தில்... ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர்.

மெள்ளப் புன்னகைத்த ஆசிரியர், ''நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல அந்த நாற்றத்தைப் போலவே, உங்கள் பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகை-பழியை மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால், தக்காளி பையை தூக்கி எறியுங்கள்'' என்றார்! அப்போது தான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது.

அப்போதே தக்காளி பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள்,பகை மறந்து ஒருவரையருவர் ஆரத் தழுவி கொண்டு வகுப்பறைக்கு திரும்பினர்.

நாம் ஒவ்வொருவரும் இப்படி தான் பழிவாங்கும் எண்ணத்தோடு காத்திருக்கிறோம் தக்காளி பை நாற்றத்தோடு...



# ஜம்இய்யதுல் உலமாவின் முஸ்லிம்களுக்கான வழிகாட்டல்கள்



கடந்த சில தினங்களாக நிலவிவரும் அசாதாரண நிலைமைகள் காரணமாக முஸ்லிம்கள் சற்று அமைதியிழந்து காணப்படுகின்றனர். சில தீய சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை தூண்டும் செயற்பாடுகளிலும் மஸ்ஜித்களையும் முஸ்லிம் வியாபார நிலையங்களையும் தாக்கும் செயற்பாடுகளிலும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. ஒரு சமூகத்தை அச்சுறுத்தும் இவ்வாறான நடவடிக்கைகள், இந்நாட்டில் நிலவும் சமாதானத்தையும் சகவாழ்வையும் பாதிப்பதுடன், இந்நாட்டின் யாப்பு உறுதிப்படுத்தியுள்ள உரிமைகளை மீறும் செயற்பாடுகளாகவும் காணப்படுகின்றன. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய சிவில் அமைப்புகள் இணைந்து இந்த தீய சக்திகளின் திட்டங்களை முறியடிக்க அரச தரப்புகளை தொடர்பு கொண்டு செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் முஸ்லிம்கள் பின்வரும் விடயங்களை பின்பற்றி நிதானமாகவும் அமைதியாகவும் நடக்குமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர், செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1. அல்லாஹ் தஆலாவுடனான தொடர்பை சீராக்குதல்:

- முஸ்லிம்களாகிய நாம் அல்லாஹ் தஆலாவின் மீது அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். நமக்கு உதவி செய்வதில் அல்லாஹ் தஆலாவை மிஞ்சிய சக்திகள் எதுவும் கிடையாது. எனவே, முஸ்லிம்கள் பெரும்பாவங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதிலும் நல்லமல்கள் மூலம் அல்லாஹ் தஆலாவுடனான தொடர்பைச் சீராக்கிக் கொள்வதிலும் அதிக கவனம் செலுத்துதல்.
- முஸ்லிம் சமூகம் முழு மனித சமுதாயத்தினதும் நலவுக்காக வெளியாக்கப்பட்ட சமூகமாகும். எனவே ஏனையோருக்கு நலவை நாடுவதும், அவர்களை நன்மையின் பக்கம் அழைப்பதும், தீமையை விட்டு அவர்களை தடுப்பதும் எம் கடமைகளாகும் என்பதை சிந்தித்து நாம் செயற்பட வேண்டும்.
- துஆ என்பது ஒவ்வொரு அடியானும் அல்லாஹ் தஆலாவிடம் நேரடியாகத் தமது கஷ்ட நஷ்டங்களை முறையிட்டு அதற்கான பரிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் ஓர் ஆயுதமாகும். எனவே நாட்டு நிலைமை சீராக அல்லாஹ் தஆலாவிடம் அதிகமாக பிரார்த்தித்தல்.

மேலும் துஆவுல் கர்ப் (கஷ்டமான, துன்பமான நேரங்களில் ஓதப்படும் துஆக்கள்) தொடர்பான ஜம்இய்யாவின் வழிகாட்டல்களையும் கருத்திற்கொண்டு, இந்த துஆக்களை நம்பிக்கையுடன் ஓதிவருதல்.

- குனூதுன் நாஸிலா என்பது அச்சம், பயம், பஞ்சம், வரட்சி போன்றவை ஏற்படும் போது அவை நீங்குவதற்காக தொழுகையில் கேட்கப்படும் துஆவாகும். ஐவேளைத் தொழுகைகளிலும் மஸ்ஜித்களில் குனூதுன் நாஸிலாவை ஓத சகல மஸ்ஜித் நிர்வாகிகள் உரிய ஏற்பாடுகளை செய்தல். மஸ்ஜித் இமாம்கள் குனூதுன் நாஸிலா தொடர்பான ஜம்இய்யாவின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப செயற்படல்.

02. சகவாழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்:

- ஜம்இய்யாவின் கிளைகள், மஸ்ஜித் சம்மேளனங்கள், ஏனைய அமைப்புகள் இணைந்து இனவாதத்தை முறியடிக்க தமது ஊருக்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல். குறிப்பாக பொலிஸாருடன் தொடர்புகளை ஏற்படுத்தி எமது மஸ்ஜித்களுக்கும் வீடுகளுக்கும் வியாபார நிலையங்களுக்கும் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அத்துடன் ஜும்ஆ தொழுகைகளின் போது விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை தேவைக்கேற்ப செய்துகொள்ளல்.
- ஒவ்வொரு ஊரிலும் உள்ள உலமாக்களும் மஸ்ஜித் நிர்வாகிகளும் துறைசார்ந்தவர்களும் சமூகத் தலைவர்களும் ஒன்றிணைந்து சகவாழ்வை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான வழிகாட்டல்கள் ஜம்இய்யாவின் சகவாழ்வுப் பிரகடனத்தில் ஏலவே வழங்கப்பட்டுள்ளன.
- இன நல்லுறவைப் பாதிக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தவிர்ந்து கொள்ளுதல். குறிப்பாக சமூக வலைதளங்களில் ஏனைய சமயங்களுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடுவதை கண்டிப்பாக தவிர்ந்து கொள்ளல்.
- குறிப்பிட்ட சிறு குழுவினரின் அடாவடித் தனங்களை வைத்து ஆத்திரம் கொள்ளாது நிதானமாகவும் தூர நோக்கோடும் நடந்து கொள்ளல்.
- பிரச்சினைகள் ஏற்படும் போது பொலிஸாருக்கு அறிவித்து உரிய சட்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

03. றமழான் மாதத்துடன் தொடர்பான வழிகாட்டல்கள்:

- அல்-குர்ஆனை ஓதுதல் மற்றும் அதனை விளங்கி நடைமுறைப்படுத்தல் போன்ற நல்லமல்களில் அதிகளவு கவனம் செலுத்துவதுடன் இரவு நேர வணக்கங்களில் ஈடுபடுதல்.
- இளைஞர்கள் மஸ்ஜித்களில் இபாதத்கள் முடிந்தவுடன், இரவு நேரங்களில் பாதைகளில் விளையாடுதல் போன்ற பிறருக்கு இடையூறு செய்யும் விடயங்களை முற்றாகத் தவிர்ந்து கொள்ளல். மேலும் பெற்றோர் இவ்விடயத்தில் கண்காணிப்புடன் செயற்படல்.
- இரவுநேர இபாதத்களில் ஈடுபடும் போதும் பயான்களின் போதும் பிறருக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஒலிபெருக்கிகளின் சத்தத்தை மஸ்ஜிதுக்குள் மாத்திரம் வைத்துக் கொள்ளல்.
- பெண்கள் மஸ்ஜித்களுக்கு செல்லும் போது ஷரீஆ வரையறைகளைப் பேணி உரிய பாதுகாப்புடன் செல்லல். ஆண்கள் இது குறித்து சிறந்த ஏற்பாடுகளை செய்து கொடுத்தல்.
- மஸ்ஜித்களுக்கு அருகில் வாகனங்களை நிறுத்தும் போது பிறருக்கு இடைஞ்சல் இல்லாது நடந்து கொள்ளல்.
- மேற்படி விடயங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கிளைகளும் மஸ்ஜித் நிர்வாகங்களும் முஸ்லிம் சமூகமும் ஒத்துழைப்புடன் செயற்படல்.

மேற்படி விடயங்களை நடைமுறைப்படுத்தி நாட்டில் ஒற்றுமையையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதோடு, எம்மை வந்தடையவுள்ள றமழானை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வோமாக. எல்லாம் வல்ல அல்லாஹ் எமது பிரார்த்தனைகளை அங்கீகரித்து நாட்டில் ஐக்கியம், சகவாழ்வு வளரவும் மக்கள் புரிந்துணர்வோடு வாழவும் நல்லருள் பாலிப்பானாக.

**அஷ்-ஷெய்க் (முப்தி) எம்.ஐ.எம் றிஸ்வி**
**அஷ்-ஷெய்க் எம்.எம்.ஏ முபாறக்**
**தலைவர் பொதுச் செயலாளர்**
**அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா**

# நாட்டை குழப்புவோர் மீது நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.ஸுஹைர்

அண்மைக்காலமாக இன முரண்பாடுகளை நாட்டில் மீண்டும் ஏற்படுத்தும் நோக்கத்தில் கடும்போக்கு மதவாதிகள் சிலர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

சிறு சிறு குழுக்களின் இதுபோன்ற மத விரோத நடவடிக்கைகளை பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆதரிக்கவில்லை. எனவே இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோரை இனம்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது பொலிஸாரின் கடமையாகும். தேவையாயின் முப்படையினரினதும் உதவிகளையும் இதற்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை 20ம் திகதி எம்.ஐ.எம்.முகையதீன் எழுதிய இன முரண்பாடும் அதிகார பரவலாக்கமும் என்ற நூலின் வெளியீடு கொழும்பில் தபால் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.ஸுஹைர் விசேட உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

சித்திலெப்பை ஆய்வு மன்றத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி மர்சூம் மௌலானாவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கத்தின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் பொதுபல சேனா போன்ற தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகள் எதிராக அமைந்துள்ளன. இவ்வாறான அரச விரோத நடவடிக்கைகளின் மூலம் இவர்கள் வெற்றி பெறப் போவதில்லை. மாறாக முஸ்லிம்களை வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் புதிய அணுகுமுறைகளுக்குள் தள்ளி விடுமோ என்று எண்ணும் அளவுக்கு இவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இன, மத விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கை இந்திய ஒப்பந்தம், 1987 ஜுலையில் கைச்சாத்திடப்பட்டது. அப்போது முஸ்லிம்களிடம் இது தொடர்பில் கருத்துக்கள் எதுவும் பெற்றிருக்கவில்லை. இதன்மூலம் இணைப்பை ஏற்றுக் கொள்ள முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அதேநேரம் சிங்கள பொதுமக்களும் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களும் கூட இணைப்புக்கு எதிராக உள்ளனர் என்பதை கருணா போன்றவர்களின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. கிழக்கில் தமிழர்கள் 40 வீதமே உள்ளனர். ஏனைய 60 வீதமானோர் தமிழர்கள் அல்ல. மேலும் முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்பை விரும்புகின்றார்களா என்ற கேள்வியை விட தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளுதலே முக்கியமாகும்.

இன்றைய சூழ்நிலையில் தனியலகு கோரிக்கைகள் இனவாத கலவரத்திற்கு வித்திடலாம். எனவே இன்னுமொரு இனக் கலவரத்துக்கு அடிகோலாமல் இரு மாகாணங்களுக்கும் தேவையான சாத்தியமான அளவு அதிகாரப் பரவலாக்கலைப் பெற்று நாட்டில் அனைவரும் சுமுகமாக வாழும் ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறினார். ஸுஹைர் நூலாசிரியர் பற்றிக் கூறியதாவது,

நூலாசிரியர் எம்.ஐ.எம்.மொஹிதீன் வடகிழக்கு பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் சமூகம் சார்பில் பாரிய சேவை செய்துள்ளார். அவரின் ஆய்வுக் கட்டுரைகள், பேச்சுக்கள், புத்தகங்கள், விசாரணைக் குறிப்புகள் மற்றும் மதிப்பீடு போன்றவை பிரயோசனமானவை. இவரின் படைப்புக்களை டாக்டர் எம்.சி.எம். கலீல், சேர். ராசிக் பரீத், டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத், எம்.எச்.எம்.அஷ்ரப் மற்றும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் முன்னாள் அமைச்சர்களான ஏ.ஆர்.மன்சூர், ஏ.எச்.எம்.அஸ்வர் போன்றவர்கள் இவரது ஆதாரங்களையும், ஆய்வுகளையும் தங்களின் பேச்சுக்களுக்காக பிரயோசனப்படுத்தி உள்ளார்கள்.



தியாக மனப்பான்மையுடன், எதுவித சுயநலமும் எதிர்பாராமல் தனது சொந்த செலவில் மூதறிஞர் மொஹிதீன் முஸ்லிம்கள் சார்பாக தெளிவாகவும் துணிவுடனும் 40 வருடங்களுக்கு மேலாக சமூகத்திற்காக உழைத்த பெருந்தகை என்று ஸுஹைர் கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் "வடக்கு கிழக்கு இணைப்பு என்பது தமிழர்களுக்கு மட்டுமானது அல்ல. தமிழ் பேசும் இனங்களான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சேர்த்தே வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றோம். எனவே தமிழைப் பேசும் முஸ்லிம்கள் வடக்கு கிழக்கை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் பசீர் சேகு தாவூத் முஸ்லிம்கள் மத்தியிலான பிரச்சினைக்கு முஸ்லிம் கட்சிகளோ முஸ்லிம் தலைமைகளோ தீர்வு தரப் போவதில்லை. நமது இளைஞர்களிடம் சமூகத்தின் பிரச்சினைகள் கையளிக்கப்பட்டு அவர்களிடமிருந்தே தீர்வு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது ஒன்றுதான் முஸ்லிம் சமூகம் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என்று கூறினார்.

சித்திலெப்பை ஆய்வு மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா தனது உரையில் எமது பேரவை இக்கூட்டத்தில் நூலாசிரியர் எம்.ஐ.எம்.மொஹிதீனை பாராட்டுவதிலும், அவரின் புத்தகத்தை வெளியிடுவதிலும் பெருமிதம் அடைவதோடு, அன்னார் சமூகத்திற்காக செய்த தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் நினைவுகூருவதோடு எதிர்வரும் காலங்களில் இப்படியான சமூகத்திற்காக முன்னின்று உழைப்பவர்களை இப்பேரவை அவதானிப்பதோடு, அவர்களுக்கு தகுந்த கௌரவத்தையும் அளிக்க தயங்காது. மற்றும் எமது அடுத்த நகர்வாக முஸ்லிம் தேசிய தலைமைத்துவ சபையொன்றினை ஏற்படுத்தி அதன்மூலம் நாட்டிற்கும், சமூகத்திற்கும் பாத்திரமான பங்களிப்பினை பலதரப்பட்ட துறைசார்ந்த புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், சிவில் அமைப்புகளோடும் அனைவரினதும் ஆலோசனைகளை பெற்று எமது பயணத்தை தொடர்புள்ளதாக தெரிவிக்கின்றார்.

நூலின் முதற்பிரதியை கலாநிதி யூசுப் கே. மரைக்கார் பெற்றுக் கொண்டார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்களான ஏ.ஆர்.மன்சூர், ஏ.எச்.எம்.அஸ்வர் ஹசன் அலி, மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட பெருந்தொகையானோர் சமூகமளித்திருந்தனர். நூலாசிரியர் எம்.ஐ.எம்.மொஹிதீன் பற்றி கவிஞர் தாஜ் , சித்திலெப்பை ஆய்வு மன்றம் சார்பில் கே.எல்.எம்.பைசால், டாக்டர் ரிசி, பொறியியலாளர் நியாஸ் ஏ சமத் ஆகியோரும் உரையாற்றினர்.

HAJJ 2017
புனித ஹஜ்
மிட்லண்ட் ட்ரவல்ஸ்



50

இன்ஷா அல்லாஹ் உங்களுடைய வாழ்நாளில் மறக்கமுடியாத புனிதப்பயணத்தை இனிதே நிறைவேற்ற, அர்ப்பணிப்புடன் கூடிய அனுபவம் நிறைந்த சேவை, எமது நிரூபிக்கப்பட்ட குழுவினால் வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்தவர்களிடமிருந்து இம்முறை புனித ஹஜ் பயணத்திற்காக எமது குழுவில் பயணிக்க விரும்புவோர்களிடமிருந்து பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

எமது ஹஜ் குழு எதிர்வரும் ஆகஸ்ட் 17ம், 18ம் திகதிகளில் புறப்படும்.

மக்கா, மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் ஹரத்திற்கு அருகில் தங்குமிட வசதி

- பழைய மினா எல்லைக்குள், ஜமாறத்திற்கு அருகில் தரித்திருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றுதல்.
- சொகுசு போக்குவரத்து
- Family Room தேவைப்படும் குடும்பத்தினருக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். ( நிபந்தனைக்குட்பட்டது )
- இலங்கை உணவு, சிற்றுண்டிகள்.
- மக்கா, மதீனாவில் இஸ்லாமிய வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்.
- குழு நன்கு அனுபவமுள்ள மவ்லவி மற்றும் வழிகாட்டிகளினால் வழிநடத்தப்படும். மற்றும் குறுகிய கால பெகேஜும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:

அல்ஹாஜ் அனஸ் மர்சூக் ( பணிப்பாளர்) - 0762366520
அல்ஹாஜ் இம்தியாஸ் ( பணிப்பாளர்) - 0777913091
அல்ஹாஜ் மவ்லவி முபாரக் (ஜிப்ரியா) - 0772342847

Midland Travels

1st Floor, 11/A, Old Galle Road,Henamulla, Panadura.
TEL: 0113009289 - 90 FAX:0382297400
E-mail: midlandtravelsinfo@gmail.com

# சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் வன்முறையாளர்களுக்கு துணை போகின்றனர்

## பாராளுமன்றத்தில் றிஷாத் குற்றச்சாட்டு

பொலிஸாரும் அந்தந்த பொலிஸ் நிலையங்களிலுள்ள பொறுப்பதிகாரிகளும் நேர்மையுடனும், பாரபட்சமுமின்றியும் செயற்பட்டு சட்டத்தைக் கையிலெடுத்திருந்தால் ஒரு சில மத குருமார்களினதும், திருடர்களினதும் முஸ்லிம்களுக்கெதிரான மோசமான செயற்பாடுகளை நிறுத்திவிருக்க முடியுமென்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கொண்டு வந்த இனக்குரோத செயற்பாடுகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் மீது உரையாற்றிய அமைச்சர் கூறியதாவது,

ஏப்ரல் 16 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை முஸ்லிம்களுக்கெதிரான சுமார் 19 - 20 சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. குருநாகல் மல்லவப்பிட்டி பள்ளிவாசல், பாணந்துறை நகரப் பள்ளி, வெல்லம்பிட்டிய கோகிலவத்தை பள்ளி ஆகியவற்றையும் இனவாதிகள் தாக்கியுள்ளனர். அது மட்டுமன்றி 150 வருடம் வரை பழமை வாய்ந்த முஸ்லிம்களின் கிராமமான அழிஞ்சிப் பொத்தானை, பள்ளிய கொடவில் மதகுருவொருவர் பொலிசாரும் பார்த்திருக்க அவர்களின் மீது அடாவடித்தனங்களை மேற்கொண்டு அந்த மக்களின் வீடுகளை அடித்து நொருக்கி, அவர்களை சொந்த இடத்திலிருந்து விரட்டி வெளியேற்றியுள்ளனர்.

அதே போன்று 300 வருடம் பழமை வாய்ந்த தோப்பூரிலுள்ள கிராமத்தில் கொழும்பிலிருந்து சென்ற மதகுருவொருவர் அந்த மக்களை அச்சுறுத்தி அவர்களை அந்தக் கிராமத்திலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சிறுபான்மை மக்கள் மீது நடாத்தப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளினால் மக்கள் நல்லாட்சியின் மீதான நம்பிக்கையை வலுவாக இழந்து வருகின்றனர். இந்த உயர் சபையில் பேசிய அமைச்சர் மனோ கணேசன், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், பிமல் ரத்நாயக்க எம் பி ஆகியோர்களின் உரைகளை கூர்மையாக அவதானித்தால் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் வாழ வேண்டியதன் அவசியத்தையே அவர்கள் வலியுறுத்துவது தெளிவாகிறது.

மதகுருவொருவரே இந்த அடாவடித்தனங்களை முன்னின்று செயற்படுத்தி வருகின்றார். இந்த உயர் சபையிலே அவருடைய பெயரைக் கூற நான் கூற விரும்பவில்லை.அந்த மதகுரு கைது செய்யப்படக் கூடுமென்ற அச்சத்தில், அவருடன் சேர்ந்த திருடர்களும் காவாலிகளும் முஸ்லிம் சமுதாயத்தை எத்தனை பாடுபடுத்துகின்றனர்? பொலிஸ் தலைமையகத்திற்கு வந்து முறைப்பாடொன்றை செய்து விட்டு வெளியே வந்து வீர வசனம் பேசிச் சென்ற அவரை கைது செய்யாமல் விட்டுவிட்டு, அதற்கடுத்த நாள் குருநாகலையில் "நாங்கள் வருகிறோம், நீங்கள் தயாராகுங்கள்'' என முற்கூட்டியே அறிவித்து விட்டு பொலிஸார் பெரிய நாடகமொன்றை நடத்தியதாகவே எமக்குப் புலப்படுகின்றது. அந்த நாடகத்தின் பின்னர் அந்த தேரரை கைது செய்யக் கூடாதென்று அவரைச் சார்ந்த திருடர்கள் அளுத்கமையில் ஊர்வலம் சென்ற போது அதற்கும் பொலிஸார் பாதுகாப்பு வழங்கும் நிலையே இந்த நாட்டில் இன்னும் இருக்கின்றது. அதுமட்டுமன்றி உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டமென்றெல்லாம் இவர்கள் நடிப்புக் காட்டுகின்றனர்.

நல்லாட்சியை கொண்டுவந்ததன் நோக்கத்தை இவர்கள் இல்லாமல் செய்து இந்த நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்ற சதி நோக்கத்தில் செயற்படுகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்தந்த பிரதேசங்களிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகள் சட்டத்தை முறையாகக் கையிலெடுத்து இந்தப் பிரச்சினையை கட்டுப்படுத்த வேண்டுமென உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் இங்கு கூறினார்.

அதே போன்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்காவின் பேச்சும் எமக்கு நம்பிக்கை தருகின்றது. சட்டமும் ஒழுங்கும் முறையாகக் கடைப்பிடிக்கப் பட வேண்டுமென பணிப்புரை விடுத்துள்ளார் ஜனாதிபதி. இந்த நிலையில் மீண்டுமொரு கலவரத்தைத் தூண்டும் நோக்கில் செயற்படும் இந்த இனவாத தேரரை உடன் கைது செய்யுமாறு நாம் வேண்டுகின்றோம் என்றும் அமைச்சர் கூறினார்.



## அசாதாரண சூழ்நிலைகள் குறித்து இரத்தினபுரி முஸ்லிம்களுக்கு விளக்கம்

(எம்.எல்.எஸ். முஹம்மத் இரத்தினபுரி)

நாட்டில் தொடர்ச்சியாக நிலவி வரும் அசாதாரண சூழ்நிலைகள் மற்றும் கடந்த 23 ஆம் திகதி அதிகாலையில் கஹவத்தையில் இடம்பெற்ற இரு கடைகள் தீ வைப்பு சம்பவம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பாக ஆராயும் விஷேட அவசரக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் இரத்தினபுரி ஜெனன்த் ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இரத்தினபுரி மாவட்டக் கிளை மற்றும் இரத்தினபுரி ஜென்னத் ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த மேற்படி அவசரக் கூட்டம் இரத்தினபுரி மாவட்ட ஜம்மியத்துல் உலமா தலைவர் அஷ்ஷெய்ஹ் ஹாமிஸ் ஹஸீன் தலைமையில் இடம்பெற்றது.

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆலிம்கள் மஸ்ஜித் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஊர் முக்கியஸ்தர்கள் வியாபாரிகள் இளைஞர்கள் மற்றும் மாவட்ட முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமைகளை முன்னிட்டு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் தொடர்பாக வருகை தந்தோருக்கு விரிவாக விளங்கப்படுத்தப்பட்டதுடன் மஸ்ஜிதுகளின் பாதுகாப்பு, றமழான் மாதத்தில் ஒலிபெருக்கி பாவனை, பெண்களின் நடமாட்டம் தொடர்பாகவும் ஜம்மியாவினால் விரிவாக விளங்கப்படுத்தப்பட்டது.

இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட ஜம்மியாவுடன் இணைந்து செயற்படும் வகையில் 15 பேர் அடங்கிய முக்கியஸ்தர்கள் குழு ஒன்றும் இதன் போது தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டு தாக்குதலுக்குள்ளான குருநாகல் மல்லவப்பிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு வடமேல் மாகாண சபை உறுப்பினர் சஹாப்தீன் ஹாஜியார், மல்லவப்பிட்டிய பிரதேச செயலாளர் மற்றும் அயலிலுள்ள கிராம விஹாராதிபதிகள் சகிதம் நேற்று விஜயம் செய்தனர். இதன்போது பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் வடமேல் மாகாண சபை உறுப்பினர் சஹாப்தீன் ஹாஜியார் பெருந்தொகையிலான நிதி உதவியை வழங்கி வைப்பதையும் தாக்குதல் சம்பவம் பற்றிக் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

(குருநாகல் இக்பால் அலி)

# மஸ்ஜித் சேவையாளர்களுக்கு உதவுங்கள்

## அமைச்சர் ஹலீம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

நாட்டில் அனைத்து விடயங்களும் மாற்றமடைந்தாலும், மஸ்ஜித் சேவையாளர்களான கண்ணியத்துக்குரிய கதீப், இமாம், முஅத்தீன்களின் விடயத்தில் மாற்றம் வராததை விட்டு கவலை அடைவதாக அமைச்சர் ஹலீம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா கதீப், முஅத்தீன் நலன்புரி அமைப்பின் 20 வருட நிறைவு நினைவாக கண்டி மாவட்ட மஸ்ஜித் சேவையாளர்களுக்கான அமானா தக்காபுல் (மருத்துவ நிதி உதவி) வழங்கும் வைபவம் கண்டி மத்திய தபால் கட்டட கேட்போர் கூடத்தில் இடம் பெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் நாடும் மாறுகிறது, காடும் மாறுகிறது, வீடும், மாறுகிறது ஆனால் பள்ளிவாசல் வேலை செய்கின்ற கதீப், இமாம், முஅத்தீன்களின் வாழ்வாதார விடயங்களில் எவ்வித மாற்றங்களும் வந்ததாக தெரியவில்லை.



அவ்வகையில் ஸ்ரீலங்கா கதீப், முஅத்தின் நலன்புரி அமைப்பு முன்வைத்துள்ள இம்மருத்துவ காப்புறுதி உதவித் திட்டம் பெரும் பயனைக் கொண்டுள்ளது. மரணத்திற்கு முன்னும், பின்னும் இத்திட்டத்தில் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இவர்களின் வாழ்வு மலரும் என நான் நம்புகின்றேன். இத்திட்டத்தை எல்லா பள்ளிவாசல்களிலும் அமுல் நடாத்த முன் வருமாறு கௌரவமிக்க டிரஸ்ட்டிமார்களுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்தார். கண்டி மல்வானா தேசகீர்த்தி மர்ஹும் மௌலவி எச் சலாஹுத்தீன் (பாரி) நினைவாக அமைப்பின் தேசிய தலைவர் மௌலவி அப்துல் ஜப்பார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பெரும் தொகையான கதீப், இமாம், முஅத்தின்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



'மாற்றங்களை வேண்டிநிற்கும் ரமழான்' என்ற தொனிப்பொருளில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்திருந்த பயிற்சி நிகழ்வில் வளவாளர்களாக கலந்துகொண்ட அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.உவைஸ் இஸ்லாஹி, பாத்திமா ரம்லத் மற்றும் நஜ்முன்னிஸா பதுர்தீன் ஆகியோர் உரையாற்றுவதை படத்தில் காணலாம். நிகழ்வில் 40க்கு மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஹெட்டஸ்ஸ கன்ஸல்)

# பறகஹதெனியவில் பொது சிரமதான பணிகள்



(குருநாகல் இக்பால் அலி)

குருநாகல் மாவட்டம் டெங்கு நுளம்புகள் பெருகும் இடமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்பிரதேசத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளார். ஒருவர் மாவத்தகம பறகஹதெனிய பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சுற்றுச் சூழலைப் பாதுகாக்கின்ற விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பிரதேச சபையின் செயலாளர் டப்லியூ ஜீ. நிசாந்த குமார தெரிவித்தார்.

மாவத்தகம பிரதேச சபையின் அலுவலகத்தின் ஏற்பாட்டில் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து பறகஹதெனிய பிரதேசத்தில் பொது சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். இதன் உத்தியோகபூர்வமாக நிகழ்வு பிரதேச சபையின் செயலாளர் டப்லியூ ஜீ. நிசாந்த குமார தலைமையில் பறகஹதெனிய பெரிய பள்ளிவாசல் முற்றத்தில் இடம்பெற்றது.

அதில் பறகஹதெனிய பெரிய பள்ளிவாசலின் தலைவர் மற்றும் முன்னாள் மாவத்தகம பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் முஹமட் ரியாழ், பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

## ஊவா மாகாண தமிழ் தின விழா

(பதுளை நிருபர்)

அகில இலங்கை தமிழ் மொழி தின ஊவா மாகாண மட்டத்திலான போட்டி நிகழ்ச்சிகள் நேற்றுமுதல் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளும் ஊவா மாகாண கல்வித்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதிக்கல்விப்பணிப்பாளர் யோ. கலையரசி தெரிவித்தார். நேற்று பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் முஸ்லிம் கலாசார நிகழ்ச்சிக்கான வார்ப்பு நாடகம் உள்ளிட்ட போட்டிகளும் நடைபெற்றன. வலய மட்டத்தில் தெரிவான முஸ்லிம் பாடசாலைகள் போட்டியில் கலந்துகொண்டிருந்தன. எதிர்வரும் நோன்பினை முன்னிட்டு இப்போட்டி முன்கூட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் ஏனைய போட்டிகள் பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையில் இடம்பெறவுள்ளன.



கலை இலக்கிய செயற்பாடுகளுக்கு பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வரும் சாய்ந்தமருது முஸ்லிம் இலக்கியப் பேரவைக்கு ஒலிநுட்ப சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக கிரேட்டலன்ட் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரபல தொழிலதிபருமான முஹர்ரம் பஸ்மீரால் அமைப்பின் செயலாளரும் இலங்கை வானொலி பிறை எப்.எம். அறிவிப்பாளருமான ஏ.எல். நயீமிடம் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான காசோலையை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். டி முத்தலிப்பின் வேண்டுகோளிற்கிணங்க தெல்தோட்டை ஜம்மிய்யதுல் ஹைரியா அமைப்பினால் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவில் ரமழான் காலத்தில் தடையின்றி சுத்தமான குடிநீரை தேக்கி வைத்துக் குடிப்பதற்காக மிகவும் வறிய குடும்பங்களுக்கு நீர்த்தாங்கிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அக்குறணை சாஹிரா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அமைப்பின் பொருளாளர் முபஸ்ஸிர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். டி. முத்தலிப், டுபாய் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதி அஹமட் கலப் இஸ்மாயில், பாடசாலை அதிபர் இர்ஷாட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நீர்த்தாங்கிகளை வழங்கி வைப்பதைப் படங்களில் இங்கு காணலாம். (குருநாகல் இக்பால் அலி)

# முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள்: பாராளுமன்ற விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

அ. அருண் பிரசாந்த்

நாட்டில் வாழும் முஸ்லிம்களை இலக்குவைத்து பொதுபல சேனா உள்ளிட்ட கடும்போக்குவாத அமைப்புக்களால் மீண்டும் அட்டூழியங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டு அமைதியின்மை நிலவி வருகின்றது.

முஸ்லிம்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சிறுபான்மையினத்தவர்களையும் அதிருப்தி மற்றும் அச்சமடையவைத்துள்ள இந்தச் சம்பவங்களை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசும் தற்போது துரிதப்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

இந்நிலையில், இவ்விவகாரம் குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான முஜிபூர் ரஹ்மான், சபை ஒத்திவைப்பு வேளை விவாதமொன்றை கொண்டு வந்தார்.

**இதன்போது இனவாத செயற்பாடுகளுக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,**

## எவராக இருந்தாலும் சட்டத்தை நடைமுறைப்படுத்துக

### எதிர்க்கட்சித் தலைவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்



நாட்டில் வாழும் மக்கள் தாம் சார்ந்த இனம் மற்றும் மதம் சார்பில் ஏனையவர்களைப் போன்று அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதே அனைவரதும் நோக்கமாகும். சமாதானமான சூழலில் வாழவேண்டும் என்றே சகலரும் விரும்புகின்றனர். எனினும், சில தரப்பினர் இந்த அமைதியை குழப்ப முயற்சிக்கின்றனர். அவர்களின் நோக்கம் தெளிவாகத் தெரியாதபோதும், இந்த நிலைமை இனியும் தொடர இடமளிக்கப் படமுடியாது.

வெவ்வேறு அமைப்புக்களிடமிருந்து நாம் பல்வேறு முறைப்பாடுகளை பெற்றுள்ளோம். நாட்டின் பல பகுதிகளில் வன்முறைகள் தற்போது இடம்பெற்றுள்ளன. இதனால் தனியார் சொத்துக்களும் அழிவடைந்துள்ளன. இவ்வாறு மக்கள் அச்சத்துடன் வாழும் நிலைமை தொடர்வது வரவேற்கத்தக்கதொரு விடயமல்ல.

இதனையும் மீறி இந்நிலைமை தொடர்ந்தால் நாட்டின் தன்மை மோசமடைந்துவிடும். எனவே, சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டு சட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் மீண்டும் இடம்பெற அனுமதிக்கக் கூடாது. எந்தவொரு இனமாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதனையும் மீறி எவரேனும் வன்முறையை ஏற்படுத்தினால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்'' என்றார்.

## அச்சம் தொடர அனுமதிக்க முடியாது

### சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க



நாட்டில் தற்போது இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நாம் பேசியுள்ளோம். சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் பொலிஸாருக்கு உள்ளமையால் அதனை துரிதகதியில் நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

சட்டம் சரிவர அமுல்படுத்தப்படுவதில்லை என மக்கள் மத்தியில் அவநம்பிக்கை எம்மீது உள்ளது. அந்நிலை தொடர மேலும் இடமளிக்க முடியாது. சட்டத்தை அனைவருக்கும் சமமாக அமுல்படுத்துவதற்காகவே நாம் ஆட்சியமைத்தோம்.

இனவாத பிரச்சினைகளுக்கு பின்னால் வேறு விதமான பிரச்சினைகளும் உள்ளன. முஸ்லிம் நபர் ஒருவருக்கு சொந்தமான கோழி கடையொன்றில் அண்மையில் தீ வைக்கப்பட்டிருந்தது. விசாரணை நடத்தப்பட்ட போது அங்கு திருட்டு நடைபெற்றுள்ளது என்றே தெரியவந்தது. அதேபோன்று கஹவத்தையில் வர்த்தக நிலையமொன்றில் தீக்கிரையாகியது. அதற்கு அப்பால் தமிழ் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கடையொன்றில் விளக்கொன்றின் மூலமே தீ பரவியுள்ளது என்றார்.

## ஜனாதிபதி மீது நம்பிக்கை உள்ளது

### ஸ்ரீலங்கா மு.கா. வின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்



முஸ்லிம்களுக்கு எதிராக பாரியளவிலான அடக்குமுறைகள் கடந்த சில நாட்களாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இது தொடர்பாக சிங்கள, ஆங்கில ஊடகங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

குறிப்பாக ஜனாதிபதியின் மாவட்டத்தில் தான் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரும் அசமந்தமாகவே இருக்கின்றனர். எனவே, இனியும் தாமதிக்காது அந்தக் குழுவினருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக நானும் எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தனும் ஜனாதிபதியை சந்தித்துள்ளோம். அவர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்றே நம்புகிறோம் என்றார்.

## எம்முடன் விளையாட வேண்டாம்

### த. மு. கூ. வின் தலைவரான அமைச்சர் மனோ கணேசன்



இது பல்லினங்களுக்குச் சொந்தமான நாடு. வடக்கிலும், தெற்கிலும் இனவாதிகள் இருக்கின்றனர். இப்படியானவர்கள் எம்முடன் விளையாட வேண்டாம் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கின்றேன். அரச பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் தலைதூக்குவதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறிருக்கையில் இனவாதிகளுக்கு இடமளிப்போம் என்று மட்டும் கருதவேண்டாம்.

இந்த இனவாத விளையாட்டின் பின்னால் யாரிருக்கின்றார்கள் என்று எமக்கு நன்றாகத் தெரியும். இந்த விடயம் தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சர் துரித நடவடிக்கைகளை எடுப்பார் என்றும் நாம் நம்புகிறோம். இவ்விவகாரம் குறித்து அமைச்சரவையிலும் பேசப்பட்டது.

தமிழ், முஸ்லிம் மக்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவை இல்லாதொழிக்கும் வகையிலேயே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றார்.

## அரசுக்கு அவசர கால சட்டத்தின் மூலமே மாகாணசபை தேர்தலை பிற்போடமுடியும்

### முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



நாட்டில் சகல மக்களினதும் அதிருப்தியை பெற்றுள்ள இந்த அரசாங்கம் செப்டம்பரில் காலாவதியாகும் மாகாணசபைகளுக்கான தேர்தலை பிற்போடுவதற்கு அவசர கால சட்டத்தை மீண்டும் கொண்டுவருவதை தவிர வேறு வழியில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்?ஷ தெரிவித்தார்.

நேற்று அவரது இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில் ,

நாளுக்கு நாள் புகழ் இழந்து வரும் இந்த அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை சாக்கு போக்கு சொல்லி பிற்போட்டு வருகிறது.ஆனால் செப்டம்பரில் காலாவதியாகும் மூன்று மாகாண சபைகளையும் அரசாங்கம் கலைத்து தேர்தலை அறிவிக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கம் தேர்தலை எதிர் கொள்ளும் ஸ்திரமான நிலையில் இல்லை. நாம் மாகாண சபை அதிகாரத்தை கைப்பற்றுவோம் என அரச புலனாய்வு பிரிவு அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

மேலும்,தினம் தினம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் இடம்பெறுகின்றன இவற்றைஅடக்கவும், தேர்தலை பிற்போட வேண்டும் என்றாலும் நாட்டில் அவசரகால சட்டம் வரவேண்டும்.நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளை பார்க்கும் போது அதற்கான முயற்சிகள் நடைபெறுகிறதோ என்ற சந்தேகம் எழுகின்றமை தவிர்க்க முடியாமல் உள்ளது.

இந்த நாட்டில் யுத்தத்தை வெற்றி கொள்ள முஸ்லிம்கள் பாரிய பங்களிப்பு வழங்கியுள்ளனர். இன்று நடப்பவைகள் சிங்கள முஸ்லிம் மக்களிடையே உள்ள நல்லுறவுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளன.அன்று ஞானசாரவை கைது செய்தால் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாக கூறிய சம்பிக்க போன்றவர்கள் இந்த அரசில் இருக்கும் வரை ஞானசார தேரருக்கு எதிராக நீதியை நிலைநாட்டுவது கடினமான ஒன்று என்றே தோன்றுகிறது எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

## மீண்டும் பேருவளை: இஷாக் ரஹுமான் எம்.பி



முஸ்லிம்களுக்கு நோன்பு காலம் தற்போது ஆரம்பிக்கவுள்ளது. 2014 காலப் பகுதியில் முஸ்லிம்கள் நோன்பு நோக்க முடியாத சூழல் காணப்பட்டது.

இதனாலேயே கடந்த ஆட்சிக்கு எமது மக்கள் சிறந்த பாடத்தை புகட்டினார்கள். இந்நிலையில், மீண்டும் நாட்டில் ஒரு இனவாதத்தை, மதவாதத்தை தூண்டும்வகையில் ஒரு சக்தி செயற்பட்டு வருகிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் மீண்டும் பேருவளைபோன்ற சம்பவங்கள் இடம்பெறும் அபாயம் காணப்படுகின்றது. பொலிஸார் ஏன் இன்னமும் இதுகுறித்து மௌனமாக இருக்கின்றனர்? ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் மீது நாம் இன்னும் நம்பிக்கையுடன் தான் இருக்கிறோம் என்றார்.

## மொனராகலை சிறையில் புதிய பள்ளிவாசல் திறந்து வைப்பு!



சிறைச்சாலைகளில் சர்வ மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பதன் ஊடாக நல்ல சமூகமொன்றினை கட்டியெழுப்பும் திட்டத்துக்கு அமைவாக மொனராகலை சிறைச்சாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வினால் இன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மொனராகலை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.என்.சீ தனசிங்க உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை

உண்மையானஉறுதியானமஹர்அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P: 077 2810009. WhatsApp: 0779697790 Email - nrahmathullah786@yahoo.com

கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சு

கூட்டுறவு மொத்த விற்பனை திணைக்களம்

**ச.தொ.ச நிறுவனத்துக்காக குத்தகை அடிப்படையில் பண்டகசாலை பகுதியொன்றை பெறுவது தொடர்பாக**

ச.தொ.ச நிறுவனத்தின் மில்கோ வேலைத்திட்டத்துக்காக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகர எல்லைக்குள் 500 சதுர அடி அளவினைக் கொண்ட நீர் மின் வசதிகளுடன் கூடிய, இரண்டு லொறிகள் நிறுத்தி வைக்கக் கூடிய கட்டட பகுதியொன்று தேவைப்படுகிறது.

இது தொடர்பாக உரிய வசதிகள் கொண்ட கட்டட உரிமையாளர்கள் தமது விண்ணப்பங்களை 2017/06/02 ஆம் திகதிக்கு முன் இல-27, வொகசோல் வீதி, கொழும்பு-02 என்ற முகவரியில் அமைந்துள்ள ச.தொ.ச தலைமை அலுவலகத்தின் 7 ஆம் மாடியில் வைக்கப்பட்டிருக்கும் இல-20 என்ற டென்டர் பெட்டியில் இடவும்.

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை திணைக்களம்**
**27, வொக்சோல் வீதி,**
**கொழும்பு-2.**

கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சு

கூட்டுறவு மொத்த விற்பனை திணைக்களம்

**இலங்கை, பாகிஸ்தான் சுதந்திர ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 6,000 மெ.தொன் அரிசியை விநியோகித்தல்.**

மேற்குறிப்பிட்ட அரிசியை 2000 மெட்ரிக்தொன் ஆக கொள்வனவு செய்வதற்கு விருப்புடைய கொள்வனவாளர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உரிய விண்ணப்பங்களை ச.தொ.ச தலைமை அலுவலகத்தின் விற்பனைப்பிரிவில் 5000/= நிதியை வைப்பிலிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2017 ஜுலை 7ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கலாம்.

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை திணைக்களம்**
**27, வொக்சோல் வீதி,**
**கொழும்பு-2.**

# மனித இனம் முதலில் தோன்றிய இடம் ஐரோப்பா



மனித இனம் முதலில் தோன்றியது ஆபிரிக்காவில்லை, ஐரோப்பாவில் தான் என்று ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மனிதனின் மூதாதையர்களான ஏப்ஸ் வகை குரங்குகள் 70 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மத்திய ஆபிரிக்காவில் தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் நம்பி வருகின்றனர். இந்நிலையில் மனித இனம் முதலில் தோன்றியது ஐரோப்பாவில்தான் என ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஜெர்மனைச் சேர்ந்த டுபிங்கன் பல்கலைக் கழக விஞ்ஞானி மாடேலைன் போமே தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பல்கேரியன் அறிவியல் அகடமியை சேர்ந்த நிகோலாய் ஸ்பேஷவ் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

இவர்கள் ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரீஸ் நாட்டில் கிடைத்த மனிதனின் மூதாதையர்களான ஹோமினிட்களின் கீழ்தாடை, பல்கேரியாவில் கிடைத்த அந்த இனத்தின் கடைவாய்ப்பல் படிமங்கள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்ததில் இந்த முடிவு கிடைத்துள்ளது.

இதன்படி மனித இனம் தோன்றியது ஐரோப்பா கண்டத்தில் தான் என்று அவர்கள் கூறுகின்றனர். இவர்கள் ஆபிரிக்காவை சேர்ந்த மனித மூதாதையர்களை விட 50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்துள்ளதும் தெரியவந்துள்ளது. ஆராய்ச்சி தொடர்பாக அந்த குழுவின் தலைவர் போமே கூறுகையில்,

"இந்த படிமங்கள் 70 இலட்சம் ஆண்டுக்கு முந்தையது. சிம்பன்சியும் மனிதனும் என இரண்டாக பிரிந்தது கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் தான். ஆபிரிக்காவில் அல்ல'' என்றார்.

# டிரம்பின் கையை உதறிய மெலானியா



ரோம் விமான நிலையத்தில் டிரம்ப் கையை அவரது மனைவி மெலானியா கைபிடிக்க மீண்டும் மறுத்துவிட்டார். இரண்டாவது முறையாக டிரம்ப் கையை மெலானியா உதறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தன் முதல் வெளிநாட்டு பயணமாக சவூதிக்கு சென்றார். அங்கிருந்து இஸ்ரேலுக்கு புறப்பட்டார். அந்நாட்டு தலைநகர் டெல்அவிவ் அருகே லோட் என்ற இடத்திலுள்ள பென் குரியான் சர்வதேச விமான நிலையத்தில், ஜனாதிபதி டிரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா ஆகியோருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது தனக்கு பின்னால் வந்த மனைவி மெலானியாவின் கையை பிடிக்க டிரம்ப் முயற்சிக்க, அதை மெலானியா வெடுக்கென்று தட்டி விட்ட சம்பவம் பலர் முன்னிலையில் சென்றது. அதே நேரத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தன் மனைவி சாராவுடன் கைகோர்த்தபடி சிவப்பு கம்பளத்தில் கம்பீரமாக சென்றார்.

இது தொடர்பான வீடியோ காட்சி, டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் பயணத்தை முடித்து கொண்டு அங்கிருந்து டிரம்ப் தனது மனைவியுடன் ரோம் நகர் சென்றார். ரோம் விமான நிலையத்திலும் டிரம்ப் கைபிடிக்க முயன்ற போது அதனை மெலானியா ஏற்க மறுத்துவிட்டார். விமானத்தில் இருந்து இறங்கிய போது டிரம்ப் கையை பிடிக்க முயன்ற போது அதனை அவர் ஏற்கவில்லை. பின்னர் இருவரும் கீழே இறங்கி சென்றுவிட்டனர்.

சுலோவேனியாவின் குடிமகளான மெலினா கடந்த 1996ஆம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறினார். பின்னர், கடந்த 2005ஆம் ஆண்டு தொழிலதிபரான டொனால்ட் டிரம்பை திருமணம் செய்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதிகளுக்கான நிதியுதவியை தடுக்க வளைகுடா நாடுகளுடன் அமெரிக்கா ஒப்பந்தம்



லஷ்கர் இ தொய்பா, தலிபான், ஐ.எஸ், அல் -கைதா, ஹக்கானி நெட்வொர்க் போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி கிடைப்பதை தடுப்பதற்காக அமெரிக்கா மற்றும் 6 வளைகுடா நாடுகள் கைகோர்த்துள்ளன.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமெரிக்கா மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலில் (ஜிசிசி) இடம் பெற்றுள்ள 6 நாடுகள் இடையே ரியாத்தில் கையெழுத்தானது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் வரலாற்றுச் சிறப்புமிக்க சவூதி அரேபிய பயணத்தின்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக அமெரிக்க நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலில் பஹ்ரைன், குவைத், ஓமான், கட்டார், சவூதி, ஐக்கிய அரபு நாடுகள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

ஒப்பந்தப்படி, தீவிரவாத அமைப்புகள் எங்கிருந்து எந்த வகையில் நிதி பெறுகின்றன என்பதை கண்டறிந்து அதை தடுப்பது மற்றும் அது தொடர்பான தகவல்களை உறுப்பு நாடுகளிடையே பகிர்ந்து கொள்வது, உறுப்பு நாடுகளின் கடமையாகும்.

டிரம்ப் திங்களன்று இஸ்ரேல் சென்றார். அங்கு அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவைச் சந்தித்துப் பேசினார்.

இதைத் தொடர்ந்து டிரம்ப் நேற்றுமுன்தினம் மேற்கு கரைக்குச் சென்றார். அங்கு பலஸ்தீன் ஜனாதிபதி முகமது அப்பாஸைச் சந்தித்துப் பேசினார். பின்னர் இருவரும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது டொனால்டு ட்ரம்ப் கூறிய போது, இஸ்ரேல், பாலஸ்தீனம் இடையே மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்க அமெரிக்கா உதவும். இஸ்ரேல், பலஸ்தீனம் இடையே அமைதி ஏற்பட்டால் ஒட்டுமொத்த மத்திய கிழக்கில் அமைதி திரும்பும் என்று தெரிவித்தார்.

# 'ஜேம்ஸ் பொண்ட்' நடிகர் ரோஜர் மூர் காலமானார்



ஜேம்ஸ் பொண்ட் ஆக நடித்து உலக புகழ் பெற்ற நடிகர் ரோஜர் மூர் புற்றுநோய் காரணமாக நேற்றுமுன்தினம் தனது 89ஆவது வயதில் காலமானார்.

பிரபல ஆங்கில துப்பறியும் நாவலாசிரியர் அயன் பிளெமிங்கின் கற்பனை பாத்திரமான ஏஜெண்ட் ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற துப்பறியும் நிபுணர் பாத்திரத்தில் ரோஜர் மூர் நடித்தவர். அந்த பாத்திரமாகவே நடித்து இரசிகர்களின் மனதை கொள்ளை கொண்டவர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ரோஜர் மூர் சுவிட்சர்லாந்தில் காலமானார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# போப் பிரான்சிஸை சந்தித்தார் டிரம்ப்





ரோம் நகர் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்தித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவி ஏற்றபின் முதன் முறையாக சவூதி, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அத்துடன் வாடிகன் சென்று போப் ஆண்டவரை சந்திக்க திட்டமிட்டிருந்தார்.

அதன்படி சவூதி, இஸ்ரேல், சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இத்தாலி சென்று, அங்கு அந்நாட்டு ஜனாதிபதி செர்ஜியோ மேட்டரல்லா, பிரதமர் பயோலோ ஜென்டிலோனி ஆகியோரை சந்திக்கிறார்.

இதனிடையே, வாடிகன் நகர் சென்ற டிரம்ப் போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்தித்தார். தன்னை சந்திக்க வந்த டிரம்பை போப் கைகுலுக்கி வரவேற்றார். பின்னர் இருவரும் பொதுவான பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தினர். சுமார் இருபது நிமிடம் வரை இந்த சந்திப்பு நடைபெற்றது.

போப் ஆண்டவர் பிரான்சிசை டிரம்ப், தற்போது தான் முதன் முறையாக சந்திக்கிறார். தேர்தல் பிரசாரத்தின் போது மெக்சிகோ எல்லையில் சுவர் எழுப்படும் என டிரம்ப் தெரிவித்து இருந்தார். அதற்கு போப் ஆண்டவர் பிரான்சிஸ் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# டிரம்பின் சவூதி பயணம் திருப்புமுனை வாய்ந்தது

**சவூதி மன்னர் சல்மான் தெரிவிப்பு**



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் சவூதி சுற்றுப்பயணம் திருப்புமுனை வாய்ந்தது என்று அந்நாட்டு அரசர் சல்மான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்று முதல் சர்வதேச சுற்றுப்பணமாக சவூதி அரேபியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த சனிக்கிழமை சவூதி அரேபியாவுக்குச் சென்ற டிரம்ப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

இந்நிலையில் டிரம்ப்பின் சவூதி அரேபிய பயணம் குறித்து அந்நாட்டு அரசர் சல்மான் அமைச்சரவை கூட்டத்தில் உரையாற்றினார் அதில், ''டிரம்பின் சவூதி அரேபிய பயணம் சவூதி - அமெரிக்கா இரு நாடுகளுக்கு திருப்புமுனை வாய்ந்தது. இரு நாடுகளுக்கு இடையேயான உறவுமுறை ஒத்துழைப்பு, ஆலோசனைகள், ஒருங்கிணைந்த செயற்பாடு மூலம் மேலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சவூதி மற்றும் அமெரிக்கா இடையேயான ஒப்பந்தங்கள் தீவிரவாதத்துக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்'' என்றார்.

டிரம்ப் தனது சவூதி அரேபிய பயணத்தில், ''மதத்தின் பெயரில் நடக்கும் வன்முறைகளுக்கு எதிராக இஸ்லாம் தலைவர்கள் தங்களது நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இது நன்மைக்கு தீமைக்கு இடையே நடக்கும் போர்'' என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியாவை அதிரவைத்த மென்செஸ்டர் தற்கொலை தாக்குதல்



★ சூத்திரதாரியை அடையாளம் கண்ட பொலிஸார்

★ ''காட்டுமிராண்டித்தனமான செயல்'' - ராணி எலிசபெத்

★ நாடுமுழுவதும் பலத்த பாதுகாப்பு; மூவர் கைது



தற்கொலைதாரி



பிரித்தானியாவின் மென்செஸ்டர் இசை நிகழ்ச்சியில் குண்டுவெடிப்பை நடத்திய சந்தேக நபரின் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மென்செஸ்டர் நகரில் உள்ள உள்ளரங்கில் அமெரிக்க பொப் பாடகி ஆரியானா கிராண்டேயின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி நிறைவடைந்து இரசிகர்கள் வெளியேறத் தொடங்கியபோது இரசிகர்களிடையே இருந்த பயங்கரவாதி தனது உடலில் மறைத்து வைத்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

உள்ளூர் நேரப்படி இரவு 10.33 மணிக்கு நடைபெற்ற இந்த பயங்கரவாதத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்ததுடன், காயமடைந்த 59 பேர் நகரிலுள்ள 8 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மென்செஸ்டர் தாக்குதலுக்கு நாங்கள் தான் காரணம் என டெலிகிராம் செயலி வழியாக ஐ.எஸ் இயக்கத்தினர் அறிவித்த போதும், பொலிஸ் தரப்பில் உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்பதில் ஐயமில்லை. இதனை ஒரே நபர்தான் நடத்தினார் என்றாலும் அவர் தனித்து செயற்பட்டாரா, அவருக்கு கூட்டாளிகள் இருந்தனரா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகிறோம் என்று தெரிவித்தனர். இந்நிலையில், இத்தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய தற்கொலைப்படை தீவிரவாதியை பொலிஸார் இனங்கண்டுள்ளனர்.

லிபியாவிலிருந்து சிறுவயதில் அகதியாக பிரித்தானியாவுக்கு வந்த 22 வயதான சல்மான் அபேடி என்பவர் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும், இவர் மென்செஸ்டர் நகரின் பல்வேறு முகவரிகளில் வசித்து வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதே தகவல்களை அமெரிக்க பாதுகாப்பு துறை அதிகாரிகளும் உறுதி செய்துள்ளதுடன் இளைஞரின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட உள்ளரங்கின் கீழ் விக்டோரியா சுரங்க மெட்ரோ ரயில் நிலையம் உள்ளது. பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்ந்தவுடன் அந்த ரயில் நிலையம் வழியேயான போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இசை நிகழ்ச்சி நடத்திய ஆரியானா கிராண்டே, பயங்கரவாதத் தாக்குதல் குறித்துக் கேள்விப்பட்டதும் தனது டுவிட்டர் வலைதளத்தில் இரங்கல் செய்தி வெளியிட்டார்.

பிரித்தானியாவின் மத்திய பகுதியில் உள்ள மான்செஸ்டர் ஒரு தொழில் நகரமாகும். அங்கு தெற்காசியாவைச் சேர்ந்த ஏராளமானோர் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் மாதம் பாராளுமன்ற வளாகம் அருகேயுள்ள பாலத்தில் காரை வேகமாக ஓட்டி வந்து மோதி நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் நடைபெறும் மற்றொரு தாக்குதல் இதுவாகும்.

கடந்த 2005 ஜூலை 7ஆம் திகதி லண்டனில் மெட்ரோ ரயில், பஸ்களைக் குறி வைத்து நிகழ்த்தப்பட்ட ஒருங்கிணைந்த பயங்கரவாதத் தாக்குதலில் 52 பேர் உயிரிழந்ததுடன், எழுநூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**ஐ.எஸ். பொறுப்பேற்பு**

தற்கொலைத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றது. அந்த அமைப்பு சமூக வலைத்தளத்தில் பல்வேறு மொழிகளில் வெளியிட்ட அறிக்கையில், ''மென்செஸ்டர் நகரில் மத துரோகிகள் கூடியிருந்த இடத்தில் கலீஃபாவின் வீரர் ஒருவர் தாக்குதல் நிகழ்த்தினார்'' என்று குறிப்பிட்டிருந்தது

''இசை நிகழ்ச்சியை ரசிக்கச் சென்ற சிறுவர்கள் உள்ளிட்டோர் பலியானது நாட்டையே அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது. இது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல். உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன்''- இவ்வாறு பிரித்தானிய ராணி எலிசபெத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ''பயங்கரவாதத் தாக்குதல் கடும் கண்டனத்துக்குரியது. இந்த பயங்கரவாத சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்'' என பிரித்தானிய பிரதமர் தெரேசா மே தெரிவித்துள்ளார்.

அதேபோல், தற்போது இஸ்ரேல் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இந்தத் தாக்குதலை கோழைகளின் செயல் என்று தெரிவித்துள்ளதோடு பலியான அப்பாவிகளின் குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் ரஷ்ய ஜனாதிபதி புடின், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான், ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் உள்ளிட்ட உலக தலைவர்கள் பலர் இச்சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# இனவாதிகளை அடக்க சட்டத்தை அமுல்படுத்துங்கள்!

## பாராளுமன்றத்தில் முஜீபுர் றஹ்மான்

இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிபீடமேற்றுவதற்கு இந்த நாட்டின் சகல இன மக்களும் தமது அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். அதே போல இனங்களுக்கிடையில் சமாதானமும் சகவாழ்வும் கடந்த கால யுத்தத்தினால் சீர்குலைந்துபோனது.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் சிதைந்து போன சமாதான சகவாழ்வை கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு தற்போதைய நல்லாட்சியை பொறுப்பேற்றுள்ள எமக்கிருக்கிறது.

அதுபோல இனங்களுக்கிடையில் சிதைந்து போயுள்ள சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும், நம்பிக்கையையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தேசிய நல்லிணக்க செயற்திட்டத்தை முன்னெடுப்பதே எமது அரசின் குறிக்கோளாகும்.

நிலைமை இவ்வாறிருக்க குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சிறு குழுக்களாக இயங்கும் இனவாத கும்பல்கள்; நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஆகவே, நல்லிணக்க செயற்பாடுகளை தகர்த்து நிர்மூலமாக்குவதற்கும் செயற்படுகின்ற இனவாதச சக்திகளை கட்டுப்படுத்தவும் காத்திரமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று முஜீபுர் றஹ்மான் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

கடந்த ஆட்சிக்காலத்தில் இனங்கள் மத்தியில் இனவாதத்தையும், குரோதத்தையும் வளர்த்து அளுத்கமையில் இனக் கலவரத்தை தோற்றுவித்தார்கள்.

அந்த ஆட்சியிலிருந்து மீள்வதற்காகவே சகல இனமக்களும் இனமத பேதமின்றி வாக்களித்து 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெற வைத்தோம்.

அன்று நாம் பெற்ற வெற்றி ஜனநாயகத்தின் வெற்றியாகும். ஊடக சுதந்திரத்தின் வெற்றியாகும். நீதித்துறையின் ஆதிக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும். அதுமட்டுமல்லாமல் இன தேசிய ஐக்கியத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் கிடைத்த வெற்றியாகும். சமாதான சூழலை உருவாக்குவதற்கும் இந்நாட்டில் சகல இனங்களும் சமாதானமாகவும், சரிசமமாகவும் வாழ்வதற்கு கிடைத்த வெற்றியாகும்.



இன்று இந்த சமாதான, நல்லிணக்க பயணத்தை சிதைப்பதற்கு வடக்கிலும் கிழக்கிலும் இனவாத சக்திகள் மீண்டும் தலைதூக்கி வருகின்றன. கடந்த கால அராஜக ஆட்சியை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வாரங்களில் மோசமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. தோல்வியடைந்த சக்திகள் மீண்டும் தலை தூக்கி பள்ளிவாசல்களுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் தீ வைத்து வருகின்றன. இவை மிகவும் கவலை தரும் விடயங்களாகும். மே மாதம் 15ம் திகதி முதல் 22ம் திகதி வரை 17 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த நாசகார சக்திகளின் பின்னணியில் இருப்போரை நாம் இனம்காண வேண்டும்.

2010 ஆண்டில் நாம் இழந்த ஜீஎஸ்பி வரிச் சலுகையை நாம் மீண்டும் பெற்றுள்ளோம். மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையை இழப்பதற்கு இடமளிக்க வேண்டாம். இந்த நாட்டில் ஜனநாயகத்தை இல்லாதொழிப்பதற்கு இடமளிக்க வேண்டாம்.

இந்நாட்டில் தேசிய ஒற்றுமையை இல்லாதொழிக்க, இந்நாட்டில் நல்லிணக்கத்தை இல்லாதொழிக்க இந்த இனவாத சக்திகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இந்நாட்டை தீவைத்து நாசமாக்க இடமளிக்க வேண்டாம். நான் மீண்டும் கேட்கிறேன் இந்த இனவாத, தீவிரவாத சக்திகளுக்கு தலைகுனியாமல் இவர்களுக்கு எதிராக சட்டத்தை உடனடியாக அமுல்படுத்துங்கள் என்றும் முஜீபுர் றஹ்மான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

## இனவாத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாராளுமன்றில் நேற்று 23இன் கீழ் 2 ஆம் இலக்க நிலையியற்கட்டளையில்; உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர குமார திஸாநாயக்க மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர், நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் இனவாத நடவடிக்கைகள் குறித்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, நாட்டில் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட இனவாத செயற்பாடுகள் தொடர்பில் தற்போது பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்த அறிக்கைகை சமர்ப்பிக்க இன்னும் சில நாட்கள் அவகாசம் தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

அதற்கிணங்க வெகுவிரைவிலேயே இதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நான் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். நாட்டின் சட்ட ஒழுங்கை நிலைநிறுத்துவது பொலிஸார் மற்றும் அரசின் பிரதானக்; கடமையாகும். எனினும், சில சம்பவங்கள் தொடரப்ஸில் உடனடியாக செயற்படாமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் நாம் கூறிக்கொள்ள வேண்டும்.

அதேநேரம், சாதாரணமாக இடம்பெற்ற சில சம்பவங்களும் இனவாத செயற்பாடுகள் என உள்வாங்கப்பட்டுள்ளன. இவை குறித்தெல்லாம் தான் தற்போது பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றார்.

## முஸ்லிம்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுர குமார திஸாநாயக்க நேற்று சபையில் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றமானது நேற்று மதியம் 1 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது 23 இன்கீழ் 2 ஆம் இலக்க நிலையியற்கட்டளையில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

வில்பத்து பிரச்சினையின் போதும், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்;ந்த இடங்கள் அழிக்கப்பட்டபோதும் அரசானது அதில் தலையிட்டு அப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறு செயற்பட்டிருந்தால் இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் ஒருவருக்கும் சூழலியலாளர்களுக்கும் இடையில் எவ்விதப் பிரச்சினைகளும் ஏற்பட்டிருக்காது.

அதேபோல, கிழக்கில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பிலும் வேறு நபர்கள் தலையிடும் முன்னரே அரசு தலையிட்டு அவற்றின் பாதுகாப்பை உறுதிபடுத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசு அதனை செய்யத் தவறிவிட்டது.

இந்நிலையில், தற்போது நாட்டில் மீண்டும் இனவாதம் தலைத் தூக்க ஆரம்பித்துள்ளது. முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மற்றும் வியாபார நிலையங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

இவற்றை அரசு உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலும் அரசு அமைதி காக்குமாக இருந்தால் மக்கள் தலையிட வேண்டிய நிலைமையே இறுதியில் ஏற்படும்.

திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான செயற்பாடுகள் தற்போது அச்ச சூழலை உருவாக்கியுள்ளது. குறிப்பாக முஸ்லிம்கள் மிகவும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையிலிருந்து மக்களை மீட்க வேண்டும்.

எனவே, அரசு என்ற ரீதியில் இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் ஏற்படாது எனவும், இந்த இனவாத செயற்பாடுகளுக்கு இனியும் இடமளிக்கப்போவதில்லை எனவும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து தண்டனை வழங்குவதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாக்குறுதி வழங்க வேண்டும் என்றார்.

## ஞானசாரரின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் பதட்டத்தை உருவாக்கி ஞானசார தேரரை கொலை செய்ய திட்டம் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஞானசார தேரரை விளக்கமறியலில் வைத்து பாதாள உலக கோஷ்டிகளின் ஆதரவுடன் அவரை கொலைசெய்ய திட்டம் இருப்பதாக தாங்கள் சந்தேகிப்பதாகா பொதுபல குறிப்பிடுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு ஒன்றை செய்துள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

## நாவின்ன...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆபத்துக்களோ ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், காலி - பத்தேகம நகரிலுள்ள ஹார்ட்வெயார் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பத்தேகம பொலிஸார், பிரதேச மக்கள், காலி தீயணைப்பு படையினர் மற்றும் மின்சார சபையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர். எதுஎவ்வாறு இருப்பினும், தீயினால் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதோடு, சேத விபரங்கள் இதுவரை கணக்கிடப்படவில்லை. நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து பத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உரிமையாளர் பெரும்பான்மையினத்தவர் ஒருவராவார். மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கடந்த ஒரு மாத காலமாக கிட்டத்தட்ட 20 முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாகிய போதிலும் இந்த சம்பவங்கள் தொடர்பில் ஒருவரும் கைது செய்யப்படவில்லை என என குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. அத்துடன், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் சட்டம் செயற்படாதது ஏன் என நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சரிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன்போது உடனடியாக சட்டத்தை செயற்படுத்துமாறு ஜனாதிபதி அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் உத்தரவிட்டுள்ளார் என அமைச்சர் மனோ கணேஷன் தெரிவித்தார்.

இந்நிலையில், முஸ்லிம் எதிர்ப்பு வன்முறை செயற்பாடு தொடர்பில் மாகாண பொலிஸார் பொறுப்பு கூற வேண்டும் என பிரதமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரமழான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வெள்ளிக் கிழமை மாலை மஃரிப் தொழுகை நேரமாகிய 6.22 மணி முதல், புனித ரமழான் மாதத்தின் தலைப் பிறையைப் பார்க்குமாறும், தலைப்பிறையைக் கண்டவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உடனடியாக நேரிலோ அல்லது 011 5234044, 011 2432110, 077 7316415 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவோ அல்லது 011 2390783 என்ற (பெக்ஸ்) தொலை நகல் ஊடாகவோ அறியத்தருமாறும், சகல முஸ்லிம்களையும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கேட்டுக்கொள்கிறது.

இம்மாநாட்டில், உலமாக்கள், கதீப்மார்கள் உள்ளிட்ட கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் அகில இலங்கை ஜம் - இய்யத்துல் உலமா பிறைக் குழுக்களின் உறுப்பினர்கள், முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் மற்றும் இலங்கை ஷரீஆ கவுன்சில் பிரதிநிதிகள், ஜும்ஆப் பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள், தக்கியாக்கள் மற்றும் ஹனபி, மேமன் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கஞ்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்குவதற்கு

தேவையான மொத்த அனுமதியை வழங்க ஜெயலலிதா ஆட்சி காலத்தில்இ அதாவது 9.11.2001 அன்று ஆணையிட்டார்.

கடந்த ஆண்டுகளைப் போலவேஇ இவ்வாண்டும் ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்க வேண்டும் என்று இஸ்லாமிய மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

இஸ்லாமிய மக்களின் கோரிக்கையினை ஏற்றுஇ இந்த ஆண்டும் புனித ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்கள் சிரமமின்றி அரிசி பெறுவதற்கு ஏதுவாக மொத்த அனுமதி வழங்க முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார்.

ஆவணங்களை உரிய ஆய்வு செய்து பள்ளிவாசல்களுக்குத் தேவையான அரிசிக்கான மொத்த அனுமதியை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படிஇ 4900 மெட்ரிக் டன் அரிசி மொத்த அனுமதி மூலம் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும். இதனால் அரசுக்கு 12 கோடியே 60 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம்இ மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 3000 -க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் பயன் அடையும்.

## ஆறு கைதிகளை சொந்த செலவில் விடுதலை செய்த ஹிஸ்புல்லாஹ்

மொனராகலை சிறைச்சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பள்ளிவாசலை திறந்து வைப்பதற்காக அங்கு விஜயம் செய்த புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், குறைந்த தண்டப் பணத்தை செலுத்த முடியாமல் கடந்த எட்டு வருடங்களாக சிறைவாசம் அனுபவித்துவரும் 6 சிறைக்கைதிகளை தனது சொந்த செலவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தார்.

அத்துடன், பிணை கையெழுத்திட எவருமில்லாது சிறையில் வாடுகின்ற மேலும் 23 கைதிகளை விடுதலை செய்யவும் தான் நடவடிக்கை எடுப்பதாக இதன் போது இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வாக்குறுதி வழங்கினார்.

மொனராகலை சிறைச்சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பள்ளிவாசல் திறப்பு விழா நேற்று புதன்கிழமை காலை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பள்ளிவாசலை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்த இராஜாங்க அமைச்சர், அங்கு இரண்டு ரக்ஆத் சுன்னத் தொழுகையையும் நிறைவேற்றினார். பின்னர், அங்குள்ள சிறைக்கைதிகளுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

இதன் போது, குறைந்த தண்டப் பணத்தை செலுத்த முடியாமல் கடந்த 8 வருடங்களாக சிறைவாசம் இருந்து வரும் 6 கைதிகளுடனும் பேசிய இராஜாங்க அமைச்சர், உடனே அவர்களை விடுதலை செய்வதற்குத் தேவையான 70ஆயிரம் ருபா பணத்தை தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்.

அத்துடன், பிணை கையெழுத்திட எவருமில்லாது சிறையில் வாடுகின்ற மேலும் 23 கைதிகளை விடுதலை செய்வதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் இதன் போது வாக்குறுதி வழங்கினார்.

## பலஸ்தீனுக்கான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேராதெனிய பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதி பட்டம் பெற்ற இவர், அரச மொழிகள் திணைக்களத்தின் ஆய்வு உத்தியோகத்தராக பணிபுரிந்து, முன்னாள் மீன்பிடியமைச்சராக இருந்த ஜோர்ஜ் ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளராகவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீன்பிடி அமைச்சராக இருந்தபோது அவரின் அலோசகராகவும் பணியாற்றியுள்ளார். மேலும், இவர் மீன் வளம், கப்பல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். பலஸ்தீனுக்கான இலங்கைத் தூதுவராலயம் 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது தூதுவராக 2013ஆம் ஆண்டுவரை பதவிவகித்தார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரீ.ஜயசிங்கவின் பிரேதம், தலவத்துகொட தெல லந்த வத்தை இல.155/27 வீட்டில் வைக்கப்பட்டு, எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு பொரளை பொது மையவாடியில் அடக்கம் செய்யப்படவுள்ளார்.

## ஞானசார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வழக்கு நேற்றையதினம் விசாரணைகளுக்காக எடுத்துகொள்ளப்பட்டது.

எவ்வாறெனினும், குறித்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாவதற்கு அவர் நீதிமன்றத்திற்கு சமூமளிக்கவில்லை. அவருக்கு பதிலாக சட்டத்தரணியொருவர் சமூமளித்ததோடு, ஞானசார தேரர் சுகயீனம் காரணமாவே நீதிமன்றத்தில் சமூமளிக்கவில்லை என சட்டத்தரணியால் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வழக்கிற்கு அவர் சமூமளிக்கவுள்ளதாகவும், குறித்த சுகயீனம் தொடர்பில் வைத்திய அறிக்கையொன்றையும் நீதிமன்றத்தில் முன்வைப்பதாகவும் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

அந்தவகையில், குறித்த வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதோடு, அத்தினத்தில் வழக்கினை விசாரிக்க புதிய நீதிபதி குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் ஹோமாகம நீதிமன்றம் தெரிவித்தது.

# ஹர்த்தால் இடைநிறுத்தம்

முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு நாடளாவிய ரீதியில் இன்று(25) நடத்த திட்டமிட்டிருந்த ஹர்த்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிக்கிணங்கவே மேற்படி ஹர்த்தால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## முஸ்லிம்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை முஸ்லிம்களுக்கு நடக்கும் அனைத்து அநீதிகளையும் தமக்கு நடக்கும் அநீதிகளாகக் கருதி, முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்க இறுதிவரை முன்னிற்பதாக மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கெதிராக கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை கண்டித்து நேற்று தேசிய நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எந்தவொரு அரசியல் கட்சி பதவியில் இருந்தாலும் சிறுபான்மையினரின் உறுமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும் என்றும் முன்பிருந்த அரசைப் போன்றே இந்த அரசாங்கமும் இவ்விடயத்தில் தவறிவிடுகின்றதா? என்ற கேள்வி எழுவதாகவும் அவர் தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது,

இன்று சிறிய, பெரிய அளவில் முஸ்லிம் பள்ளிவாசல்கள், வியாபார தலங்கள் தாக்கப்படுகின்றமை 1983 கருப்பு ஜூலையை நினைவுக்கு கொண்டுவருகின்றது. அது தமிழர்களை மாத்திரம் பாதிக்கவில்லை. முழு இலங்கையையும் பாதித்தது. இலங்கை தேவைக்கதிகமாகவே இரத்தம் சிந்தியுள்ள நாடு. இரத்தம் சிந்தாது 'சுதந்திரமடைந்த நாடு 30 வருடங்களாக இரத்தம் சிந்தியது. இனியும் இரத்தம் சிந்தவேண்டிய அவசியமில்லை. யுத்தத்தின் பின்னர் நாட்டில் சீர்திருத்தப் பணிகள் நடைபெறவில்லை. எனவே, யுத்தம் முடிந்து 10 வருடங்களாகின்ற போது மீண்டுமொரு யுத்தத்தை தோற்றுவிக்கும் பாதைக்கு நாடு செல்கின்றது. தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி தேசிய இனமாக செயற்படவேண்டும். தமிழர்களுக்கு பாடம் போதித்தோம், முஸ்லிம்களுக்கும் பாடம் புகட்டுவோம் என்ற சிந்தனையில் சிலர் இருக்கின்றனர். பாடம் போதிக்கச்சென்றே நாடு இந்நிலையில் உள்ளது. முஸ்லிம்களை அச்'றுத்தும் திட்டமொன்று உள்ளது. அரசாங்கம் இதற்கெதிராக கடுமையான நடவடிக்கையெடுக்க வேண்டும். பொலிஸ் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை. 1983இலும் பாதுகாப்பு படையினர் சிங்களவர்களின் பக்கம் சார்ந்தனர். 30 வருட யுத்தத்தில் முடிவடைந்தது. அதேபோன்று தர்கா நகர் சம்பவத்திலும் சில இராணுவத்தினர் சிங்களவர்கள் பக்கம் சார்ந்தனர்.

அரசியல்வாதிகளின் உள்ளங்களில் இருக்கும் இன, மத வேறுபாடு நீடிக்கின்றது. தேசத்தைக் கட்டியெழுப்ப இதுவே தடையாக அமைகின்றது.

## கடைகளுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமூகமயப்படுத்த வேண்டியதே காலத்தின் தேவை என்று மறுமலர்ச்சி இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் விஜய உந்துபிடிய தெரிவித்தார்.

அண்மைக் காலமாக தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், மதஸ்தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை கண்டித்து நேற்று தேசிய நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக நாடுகள் எல்லைகளை கடந்து ஒன்றுபடுகின்ற இக்காலத்தில் இலங்கையர்கள் இனமுரண்பாடுகளைத் தோற்றுவித்துக்கொள்ள முயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நாம் பிறக்கும்போது குறித்த இனமோ, மதமோ வேண்டுமென்று இறைவனுக்கு விண்ணப்பம் சமர்ப்பிப்பதில்லை. நாம் எதிர்பாராதவிதமாகவே ஏதோவொரு மதத்தை இனத்தை சார்ந்துள்ளோம் என்ற சிந்தனை மாற்றம் மக்கள் மத்தியில் வரவேண்டும். முஸ்லிம்கள் வியாபாரத்துக்காகவே இலங்கைக்கு வந்தவர்கள். அவர்கள் வியாபாரத்தில் திறமைசாலிகள். முஸ்லிம்களின் மதத்தின் பிரகாரம் அவர்கள் வட்டி எடுப்பதோ, கொடுப்பதோ இல்லை. முஸ்லிம்களின் வியாபார முன்னேற்றத்தைப் பார்த்து ஏனையோர் பொறாமைகொள்கின்றனர். உண்மையில் பொறாமை கொள்வதைத் தவிர்த்து அவர்கள் முன்னேறிய விதத்தில் முன்னேற முயற்சிக்க வேண்டும்- என்றார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

# தரங்க, குசல் அதிரடி; வென்றது இலங்கை



சம்பியன் கிண்ண போட்டி தொடருக்காக இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை அணி, ஸ்கொட்லாந்து அணியுடன் உத்தியோகப்பற்றற்ற 2 ஒரு நாள் பயிற்சி போட்டிகளில் விளையாடியது.இதன் முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியிடம் அதிர்ச்சி தோல்வியை சந்தித்த இலங்கை அணி, இரண்டாவது போட்டியில் மிக அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியைப் பதிவு செய்தது.

இந்தப்போட்டியில் அணித்தலைவர் மெத்யூஸிற்கு ஓய்வளிக்கப்பட்டதுடன், தலைவராக உபுல் தரங்க செயற்பட்டார்.இதன்படி, நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 166 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது.இலங்கை அணி சார்பில் சிறப்பாக பந்துவீசிய லக்ஷான் சந்தகன் 39 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், நுவன் குலசேகர மற்றும் சீக்குகே பிரசன்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பில் நிரோஷன் திக்வெல்ல மற்றும் உபுல் தரங்க ஜோடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.இதில் திக்வெல்ல 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.பின்னர் களமிறங்கிய குசல் மெண்டிஸ், உபுல் தரங்கவுடன் இணைந்து சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த, 22.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து இலங்கை அணி வெற்றியிலக்கை அடைந்தது.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய குசல் மெண்டிஸ் 51 பந்துகளில் 74 ஓட்டங்களை குவிக்க மறுமுனையில் உபுல் தரங்க நிதானமாக 53 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலையில் சம்பியன் கிண்ணப் போட்டிகளுக்காக இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதலாவது பயிற்சிப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இங்கிலாந்தின் கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## தெற்காசிய கூடைப்பந்து:

# சம்பியனானது இந்தியா இலங்கைக்கு மூன்றாமிடம்



பீ.எப்.எம் றிஷாட்

தெற்காசிய கூடைப்பந்து சம்பியன்ஷிப் தொடரில் இந்திய அணி 5ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

மாலைதீவில் நடைபெற்று வந்த இம்முறை போட்டித் தொடரின் நடப்பு சம்பியன் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, மாலைதீவுகள் என 5 அணிகள் லீக் சுற்றில் பங்கேற்றன. முதல் மூன்று போட்டிகளில் இந்திய அணி, முறையே மாலைதீவுகள் (84-42), இலங்கை (88-61), பங்களாதேஷ் (142-71) அணிகளை வீழ்த்தியது. இந்நிலையில் நேற்று நடைபெற்ற நான்காவது மற்றும் கடைசி போட்டியில் இந்தியா, நேபாளம் அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய இந்தியா 90-44 (25-6, 20-7, 45-13, 19-18) என்ற கணக்கில் வெற்றி பெற்றது.லீக் சுற்றின் முடிவில், 4 போட்டியிலும் வெற்றி கண்ட இந்தியா, 8 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து, 5வது முறையாக கோப்பை வென்றது. இதற்கு முன், 2002, 2014, 2015, 2016இல் சாம்பியன் பட்டம் வென்றிருந்தது. இதன்மூலம் எதிர்வரும் ஆகஸ்ட் 8-20ல் லெபானனில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கூடைப் பந்தாட்டத் தொடருக்கு தகுதி பெற்றது. இந்நிலையில்,கடந்த முறை 2ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணி, நேற்று மாலைதீவுகள் அணியுடன் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 69க்கு 63 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவி போட்டித் தொடரின் 3ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.



முன்னதாக போட்டித் தொடரின் 4ஆவது நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி, நேபாள அணியை வீழ்த்தி போட்டித் தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.இப்போட்டித் தொடர் முழுவதும் அபாரமாக விளையாடிய நேபாள அணியை, 81க்கு 65 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை அணி வெற்றி கொண்டது.

எனினும், பங்களாதேஷ் அணியுடன் நடைபெற்ற முதலாவது போட்டியில் 90க்கு 80 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி, 2ஆவது போட்டியில் இந்தியாவிடம் 88க்கு 61 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவி, தொடர்ச்சியான 2ஆவது தோல்வியைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# செரண்டிப் பயிற்றுனராக இஸ்ஸடீன் நியமனம்



இலங்கை தேசிய கால்பந்து அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய இலங்கை இராணுவப்படை கால்பந்து அணியின் முன்னணி வீரருமான மொஹமட் இஸ்ஸடீன், மாவனல்லை செரண்டிப் கால்பந்துக் கழக அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் டிவிஷன் 2 போட்டித் தொடரில் விளையாடும் முக்கிய அணிகளில் ஒன்றாக உள்ள செரண்டிப் விளையாட்டுக் கழகம், கடந்த இரண்டு பருவகால தொடர்களிலும் காலிறுதிச் சுற்று வரை முன்னேறியிருந்தது. அதேபோன்றே, அண்மையில் நிறைவுற்ற இந்த பருவ கால எப்.ஏ கிண்ணப் போட்டிகளில் பல அணிகளை வீழ்த்தி இறுதி 32 அணிகளைக் கொண்ட சுற்று வரை செரண்டிப் அணி முன்னேறியிருந்தது. எனினும், எதிர்வரும் டிவிஷன் 2 தொடரில் சம்பியன் பட்டம் வென்று, இலங்கையின் முதல்தரத் தொடரான சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கு கொள்ளும் நோக்குடன் உள்ளது செரண்டிப் அணி. இதற்கான ஒரு முயற்சியாகவே, இஸ்ஸடீன் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனம் குறித்து செரண்டிப் கால்பந்துக் கழகத்தின் முகாமையாளர் மொஹமட் நௌஷில் கருத்து வெளியிடுகையில், அடுத்த முறை சம்பியன் லீக் கால்பந்தில் விளையாடும் இலக்குடனே நாம் உள்ளோம். அதற்கான ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளர் எமக்குத் தேவையாக இருந்தது. அந்த வகையில் இஸ்ஸடீனின் கடந்த கால பயிற்றுவிப்பு திறமைகளைப் பார்க்கும்பொழுது, அவரே எமது அணிக்கு சிறந்தவராக கருதப்பட்டார்.

இலங்கைக் கால்பந்தில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்ட இவர் எம்முடன் இணைவது, எமது இளம் வீரர்களுக்கு மிகப் பெரிய அனுபவத்தையும், அவர்களில் சிறந்த மாற்றங்களையும் பெற்றுக் கொடுக்கும். அதுவே அணியின் முன்னேற்றத்திற்கு சிறந்த பங்கு வகிக்கும் என்றார்.

இவரது பயிற்சியின் கீழ், திஹாரிய யூத் அணியை சம்பியன்ஸ் லீக் தொடருக்கு முன்னேற்றியது. திஹாரிய யூத் அணிக்கு தொடர்ந்து நான்கு வருடங்கள் பயிற்சி வழங்கிய இவர், தனது மூன்றாவது வருடத்தில் அவ்வணியை டிவிஷன் 2 தொடரின் சம்பியனாக முடிசூட வைத்தார்.

தனது புதிய நியமனம் குறித்து கருத்து தெரிவித்த மொஹமட் இஸ்ஸடீன், இந்த அணி தேசிய அளவில் உள்ள சிறந்த அணிகளில் ஒன்று. தற்பொழுது அணியின் நிலை மிகவும் சிறந்த மட்டத்தில் உள்ளது. அனுபவம் மிக்க சிறந்த வீரர்கள் குழாமில் உள்ளனர். குறிப்பாக சிரேஷ்ட வீரர் ஷெரோன் அணியில் இருப்பது எனக்கு மிகப் பெரிய பலம். இவர்களை சம்பியன்ஸ் லீக் போட்டிகளுக்கு முன்னேற்றும் இலக்குடனேயே நான் செயற்படுவேன் எனக் குறிப்பிட்டார்.

## 16 வயதின் கீழ் ஆசிய கால்பந்தாட்டம்:

# 27, 28ஆம் திகதிகளில் கொழும்பில் தெரிவுப் போட்டிகள்



பீ.எப்.எம் றிஷாட்

2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 16 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடரின் தகுதிகாண் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ளன. இத்தகுதிகாண் சுற்றுப் போட்டியில் மொத்தமாக 45 ஆசிய நாடுகள் போட்டியிடுகின்றன. இவ்வணிகள் மேற்குப் பிராந்தியம் (23 அணிகள்) மற்றும் கிழக்குப் பிராந்தியம் (22 அணிகள்) என இரண்டு பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிராந்தியத்திலும் 5 குழுக்கள் பெயரிடப்பட்டுள்ளன. இத்தொடரில் முதல்முறையாக பங்கேற்கும் இலங்கை அணியானது உஸ்பெகிஸ்தான், சவூதி அரேபியா, ஜோர்தான், பஹ்ரைன் ஆகிய அணிகளுடன் குழு ஏஇல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், குறித்த போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை வீரர்களுக்கான தெரிவுப் போட்டிகளை இம்மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு இலங்கை கால்பந்து சம்மேளனம் தீர்மானித்துள்ளது. இதன்படி, குறித்த இரு தினங்களில் நடைபெறவுள்ள தெரிவுப் போட்டிகளில் 2002ஆம் ஆண்டு ஜனவரியில் பிறந்தவர்கள் மாத்திரம் கலந்து கொள்ள முடியும் எனவும், இதற்கான பிரதான தெரிவுப் போட்டி கொழும்பு சிட்டி கால்பந்து மைதானத்தில் காலை 7.30 மணி முதல் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரு பிரிவுகளாக நடைபெறவுள்ள இத்தெரிவுப் போட்டிகளில் எதிர்வரும் 27ஆம் திகதியன்று வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த வீரர்களுக்கான தெரிவுப் போட்டிகளும், 28ஆம் திகதியன்று மேல் மற்றும் தென் மாகாணங்களைச் சேர்ந்த வீரர்களுக்கான தெரிவுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 16 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடரின் நடப்புச் சம்பியனான ஈராக் மற்றும் இந்தியா, பலஸ்தீன், நேபாளம் ஆகிய அணிகள் குழு டியிலும், கடந்த முறை இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட ஈரான் மற்றும் கிரிகிஸ்தான், ஆப்கானிஸ்தான், லெபனான், பூட்டான் ஆகிய அணிகள் குழு சியிலும் போட்டியிடவுள்ளன. இரு முறை சம்பியன் பட்டம் வென்ற அணியான வட கொரியா கடந்த முறை அரையிறுதிச் சுற்று வரை முன்னேறியிருந்ததுடன் அவ்வணியானது ஹொங்கொங், சைனீஸ் தாய்பே, மெக்கோ, புரூனை ஆகிய அணிகளுடன் குழு எப் இல் காணப்படுகின்றது. மற்றுமொரு பிரபல அணியான ஜப்பான் அணியும் கடந்த தொடரில் அரையிறுதியுடன் வெளியேறியிருந்தது. அவ் அணி இம்முறை சிங்கப்பூர், மலேஷியா, குவாம் ஆகிய அணிகளுடன் குழு ஜேயில் போட்டியிடுகின்றன. இந்நிலையில், குழுக்களில் முதல் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் முதல் பத்து அணிகள் இரண்டாம் இடங்களை பெறும் அணிகளில் சிறந்த ஐந்து அணிகள் மற்றும் போட்டியை நடத்தும் அணி என 16 அணிகள் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியில் மீண்டும் சசிகலா

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 24ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை மகளிர் அணியில் நட்சத்திர வீராங்கனை சசிகலா சிறிவர்தனவும் இடம்பெற்றுள்ளார்.

உபாதை காரணமாக கடந்த ஒரு வருடங்களாக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடாத இலங்கை மகளிர் அணியின் முன்னாள் தலைவியான சசிகலா, இவ்வருட முற்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டிகளிலும் விளையாடவில்லை.

இந்நிலையில், இனோகா ரணவீர தலைமையிலான 15 பேர் கொண்ட இலங்கை மகளிர் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அனுபவ வீராங்கனைகளான சமரி அத்தபத்து, ஏஷானி லொகுசூரிய, சமரி பொல்கம்பொல மற்றும் ஸ்ரீபாலி வீரக்கொடி உள்ளிட்ட வீராங்கனைகளும் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சச்சின் திரைப்படத்துக்காக ஒன்று கூடும் இந்திய அணி




சச்சின் வாழ்க்கையைச் சொல்லும் சச்சின் எ பில்லியன் ட்ரீம்ஸ் படத்தை நேற்று மாலை இந்திய அணியினருக்காக மும்பை வெர்சோவா பகுதியின் இருக்கும் திரையரங்கில் படம் திரையிடப்பட்டது.

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் 24 வருட கிரிக்கெட் வாழ்க்கை வரலாறு, சச்சின்: எ பில்லியன் ட்ரீம்ஸ் என திரைப்பட வடிவில் உருவாகியுள்ளது. ஜேம்ஸ் எர்ஸ்கின் இயக்கியுள்ள இந்தப் படத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார்.

# உமர் அக்மல் விவகாரம்; இன்சமாம் - ஆதர் மோதல்





சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து உமர் அக்மல் நீக்கப்பட்ட விவகாரத்தில் பயிற்சியாளர்- இன்சமாம் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து உமர் அக்மல் நீக்கப்பட்டார்.

போட்டித் தொடருக்கு முன் 2 முறை நடத்தப்பட்ட உடல் தகுதி சோதனையில் அவர் தோல்வி அடைந்தார். இதைத்தொடர்ந்து உமர் அக்மலை இங்கிலாந்தில் இருந்து உடனடியாக திரும்புமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தரவிட்டது. அத்துடன், அவருக்குப் பதிலாக ஹாரிஸ் சொஹைல் பாகிஸ்தான் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.இந்நிலையில் உமர் அக்மல் விவகாரத்தில் பாகிஸ்தான் தெரிவுக் குழுத் தலைவர் இன்சமாம் உல் ஹக் மற்றும் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் இடையே மோதல் பிளவு ஏற்பட்டு இருக்கிறது.உமல் அக்மலுக்கு முதலில் தேசிய கிரிக்கெட் அகடமியில் இன்சமாம் மேற்பார்வையில் உடல் தகுதி சோதனை நடத்தப்பட்டது. இதில் அவர் உடல் தகுதியுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து அவரை சம்பியன் கிண்ண அணியில் இணைத்துக்கொள்ள தெரிவுக்குழுவு நடவடிக்கை எடுத்தது.

ஆனால், உமர் அக்மலின் உடல் தகுதி தொடர்பில் பயிற்சியாளர் மிக்கி ஆர்தருக்கு திருப்தி அளிக்கவில்லை. இதைத்தொடர்ந்து இங்கிலாந்து சென்ற பிறகு உமர் அக்மலுக்கு 2ஆவது முறையாக உடல் தகுதி சோதனை செய்ய அவர் உத்தரவிட்டார். இந்த உடல் தகுதி சோதனையில் அவர் உடல் தகுதியுடன் இல்லை என்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து உமர் அக்மலை நீக்கியது. இந்த விவகாரத்தில் இன்சமாம்- ஆர்தர் இடையே மோதல் உருவாகி இருக்கிறது. இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் உடன் விசாரணையொன்றை ஆரம்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ஷஹாரியர் கான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# மும்பையின் வெற்றியில் அம்பானியின் மாமியார்!



கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் மும்பை அணி வெற்றி பெற வேண்டும் என சாமி கும்பிட்டுக்கொண்டிருந்த பாட்டி யார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. அந்தப் பாட்டி வேறு யாரும் இல்லையாம் மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளர் நீட்டா அம்பானியின் தயாரான பூர்ணிமாபென் தலால் ஆவார்.

மும்பை இந்தியன்ஸ்- புனே அணிகள் மோதிய ஐ.பி.எல் இறுதிப் போட்டியில், புனே அணிக்கே வெற்றி என நினைத்துக் கொண்டிருந்த நிலையில், அதிரடியாக விளையாடிய மும்பை இந்தியன்ஸ் கடைசி ஓவரில் த்ரில் வெற்றியை தங்கள் வசமாக்கி கொண்டனர்.இந்நிலையில், நீட்டா அம்பானியின் தயாரான பூர்ணிமா பென் தலாலுக்கு மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம், பொலிவூட் திரைப் பிரபலங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 25TH MAY 2017